Registered as a NewsPaper

23 JAN 2005

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | தை-11 | 24-01-2005 | திங்கட்கிழமை | ஓசை -341


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247 (சி-11120)

# சுனாமியால் இறந்தோரை நினைவு கூரும் முகமாக

# 26ஆம் திகதி தேசிய துக்கதினமாக பிரகடனம்!

## விடுதலைப்புலிகள் இயக்கம் அறிவிப்பு

**சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக தமிழர் தாயகப் பகுதியிலும் தெற்காசிய நாடுகளிலும் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் முகமாக எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை தேசிய துக்க தினமாக தமிழீழ விடுதலைப்புலிகளால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. தமிழீழ அரசியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இப் பத்திரிகை அறிக்கையின் விபரம் வருமாறு;

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்ற போரினால் மிகுந்த துன்பங்களையும் அழிவுகளையும் சொல்லொணாத இடர்களையும் சந்தித்த எமது மக்கள் வாழ்க்கையின் அனுகூலங்கள் அனைத்தையும் இழந்தனர். தற்போது நிலவிவரும் போர் நிறுத்த காலத்தில் எமது மக்கள் கடற்கரையோரங்களில் குடியேறி தமது வாழ்வாதாரத்திற்கான கடற்றொழிலை மேற்கொண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமூகசேவை அமைச்சினால் வழங்கப்பட்ட

## சுனாமியால் பாதிக்கப்பட்டோரை பதிவு செய்யும் படிவத்தில் தமிழ் இல்லை

"சுனாமி" ஆழிப்பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டு கரையோரப் பிரதேச மக்கள் சம்பந்தமான விபரங்களைச் சேகரிப்பதற்காக சிறிலங்கா சமூகசேவை அமைச்சினால் வழங்கப்படும் படிவங்கள் யாவும் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மட்டும் அச்சிடப்பட்டிருப்பதனால் பொது மக்கள் அவற்றை பூர்த்திசெய்து வழங்கமுடியாது பெரும் அவதிப்பட்டு வருகின்றனர். சிறிலங்கா சமூகசேவைகள் அமைச்சினால் விநியோகிக்கப்பட்டுவரும் மேற்படி

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் புனர்வாழ்வுக்கழக தலைமையகத்தில்

## "மீளவும் கடலை நோக்கி" நிகழ்ச்சித்திட்டம் நோர்வே உயர் குழு ஆரம்பித்தது



(அலுவலக செய்தியாளர்)

"மீளவும் கடலை நோக்கி" சுனாமியின் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்தி சேவை நிகழ்ச்சித்திட்டத்தினை நோர்வே உயர்மட்டக் குழுவினர் ஆரம்பித்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேரழிவைச் சந்தித்த மீனவர்களின் தொழிலை ஆரம்பிக்க உதவவேண்டும்!

### நோர்வே அமைச்சரிடம் த.பு.க. கோரிக்கை

(அலுவல செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தினால் முற்றாக பாதிப்பிற்குள்ளாகியுள்ள மக்கள் மீளவும் தங்கள் கடற்தொழிலினை ஆரம்பிப்பதற்கு நோர்வே அரசு அதற்கான உதவியினை நல்கிடவேண்டும்.

இவ்வாறு கடந்த 22ஆம் திகதியன்று கிளிநொச்சி தமிழர் புனர்வாழ்வுக் கழக தலைமைச் செயலகத்திற்கு விஜயம் மேற்கொண்ட நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் ஹில்ட் எவ். ஜோன்சன் ஆகியோரைக் கொண்ட நோர்வே உயர்மட்டக் குழுவிடம் தமிழர்புனர்வாழ்வுக் கழகசெயலாளர் நாயகம் கே.பி.றெஜி அவர்கள் வேண்டுகோளினை விடுத்துள்ளார்.

அன்றையதினம் பிற்பகல் 2.00 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக தலைமைச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது சுனாமி அனர்த்த முகாமைத்துவம் அதாவது சுனாமி அனர்த்தம் உடனடி நிவாரணம், பாதிக்கப்பட்ட இடங்களின் மீள் கட்டுமாணம், அபிவிருத்தி முகாமைத்துவம் குறித்தவிளக்கத்தினை தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் நாயகம் கே.பி.றெஜி அவர்கள் நோர்வே உயர் மட்டக்குழுவினர்களுக்கு எடுத்துரைத்தார்.

மேற்படி கலந்துரையாடலின் போது சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை நல்கிய நோர்வே அரசிற்கும் அந்நாட்டு மக்களுக்கும் தபுகழகபணிப்பாளர் நாயகம் நன்றி தெரிவித்துக்கொண்டார். (சோ)

## ஐ.தே.க. எதிர்க்காது

நாட்டில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையை தாம் எதிர்க்கப்போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் இது தொடர்பாக கருத்துரைக்கையில்,

இந்த அவசரகால நிலையை

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி நிவாரணத்துக்கு வழங்கப்பட்ட நிதியில் கடற்படைக் கப்பல்களை வாங்கத் திட்டம்!

### தயா சந்தகிரி பாதுகாப்பு அமைச்சிடம் சிபார்சு

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் அழிந்து போயுள்ள நாட்டை மீளக் கட்டியெழுப்பவென வெளிநாடுகள் வழங்கும் நிதியின் ஒரு பகுதியைக் கொண்டு கடற்படைக்குக் கப்பல்களைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சிடம் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி பரிந்துரை செய்துள்ளார்.

சுமார் 358 கோடியே 50 லட்சம் ரூபாவுக்கு கடற்படைக்குக் கப்பல்களைக் கொள்முதல் செய்யும் ஒப்பந்தம் ஒன்றில் கடற்படைத் தளபதி கடந்த டிசம்பர் 22ஆம் திகதி கொழும்பிலுள்ள தனியார் கப்பல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் அமெரிக்க படையினர்

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களில் சேவையில் ஈடுபடுவதற்கென மேலும் ஒரு தொகுதி அமெரிக்கப் படையினர் குடாநாட்டிற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகத் தெரிய வரு கிறது

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்கள் செயலிழப்பு

ஹெய்ட்டிக்கு இலங்கையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட அமைதிகாப்பு படையினருக்காக இந்தியாவில் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட ஆயுத உபகரணங்கள் தரம் குறைந்தவை என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் சிறில்

(12ஆம் பக்கம் பார்க்க)

# சுனாமி புனரமைப்பு நடவடிக்கைகளில் புலிகளுடன் இணைவதை ஏற்கமாட்டோம்

### ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அறிவிப்பு



(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் புனரமைப்பு நடவடிக்கைகளில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை இணைத்துக் கொள்வதை தாம் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதென மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்; ஒழுங்கான அரசு அதன் உத்தியோக பூர்வ நடவடிக்கைகளில் ஆயுதம் தாங்கிய இயக்கம் ஒன்றை உள்ளடக்க முடியாதெனவும் அவ்வாறு அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்களேயானால் ஆயுதம் தாங்கிய இயக்கமொன்றின் நிர்வாகத்தை ஏற்றுக் கொள்வதாக அமையும் எனவும் இதனை மக்கள் விடுதலை முன்னணி எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**காணி விற்பனைக்குண்டு**

கரடிபோக்கு சந்தியிலிருந்து 300 தூரத்தில் கணேசபுரத்தில் அமைந்துள்ள 1/2 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டியது. சுடர் நிலவு பல்பொருள் வாணிபம், ஆனந்தபுரம், கிளிநொச்சி. தகவல்:க.மார்க்கண்டு. (5544)

## இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக்கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை, கண்டிவீதி, கிளிநொச்சி. T.P 021-2285750. (சி.11181)

## SCIENCE HALL

புதுக்குடியிருப்பு

2007-கணித விஞ்ஞானப் பிரிவுகள் 9,10,11 இற்கான கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், விவசாயம், தரம்-5 (புலமைப்பரிசில்) வகுப் புக்கள் ஆரம்பம் 24.01.2005 (பாடக் கட்டுப்பாடுகள் இல்லை. நிர்வாகி.

(5100)

# அரசாங்க திணைக்களங்கள் சில தமிழ்ப் பட்டதாரிகளுக்கு கதவடைப்பு

அண்மையில் அரசாங்க சேவைகளில் நியமனம் பெற்ற புதிய தமிழ்ப்பட்டதாரிகளை அவர்களுக்கென நியமிக்கப்பட்ட திணைக்களங்களில் சேவையில் இணைத்துக்கொள்ள சில திணைக்களங்களால் மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட சில அரச திணைக்களங்களுக்குத் தமது பணியை ஆரம்பிப்பதற்காக நியமனக் கடிதங்களுடன் சென்ற சில தமிழ்ப் பட்டதாரிகள் அத்திணைக்களங்களின் அதிகாரிகளினால் சேவையில் இணைத்துக் கொள்ளாது திரும்பி அனுப்புகின்ற சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

நீண்ட காலம் தமது உயர் படிப்புக்களை முடித்தும் உரிய நேரத்தில் வேலை கிடைக்காமல் காத்திருந்த பட்டதாரிகள் பெருமளவானோருக்கு அண்மையில் சகல அரச கூட்டுத் தாபனங்கள், திணைகளங்களிலும் அரச பணியில் நியமனம் கொடுக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. இவ்வாறு தமக்கு நியமனம் கொடுக்கப்பட்ட இடங்களில் பட்டதாரிகள் பணியை ஏற்கச் சென்ற சமயம் உயர் அதிகாரிகளினால் இவ்வாறு திருப்பி அனுப்பப்படும் சம்பவங்களினால் இப் பட்டதாரிகள் மன உளைச்சல்களை அனுபவிப்பதோடு தமக்கு அவமானம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக கவலையடைந்துள்ளனர்.

## ஆண்டான் குளம் பாடசாலையில் கணினிப் பயிற்சி நிலையம் திறப்பு

மன்னார் ஆண்டான்குளம் றோ.க பாடசாலையில் கணினி பயிற்சி நிலையம் மன்னார் ராயப்பு ஜோசப் அவர்களால் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மடுவலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் திட்டப்பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (18)



கடற்பேரலையால் அழிக்கப்பட்டுள்ள நாயாற்றுப்பாலம். (படம்:வரன்)

## கலந்துரையாடல்

(முல்லை)

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட இவ்வாண்டு க.பொ.த. உ/த பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களுக்குமான கலந்துரையாடல் இன்று முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் மு.ப. 9.00 மணிக்கும் மு/புதுக்குடியிருப்பு ம.வி.யில் பி.ப. 2.00 மணிக்கும் நடைபெறவுள்ளது. எனவே, அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ மாணவர் அமைப்பினர் கேட்டுக்கொள்கின்றனர்.

## -புது.வேணாவில் பாடசாலையிலுள்ள- முல்லை வாழ் மக்களுடன் பாடசாலை சமூகம் இணைவு

கடந்த26 ஆம் திகதி நடந்த சுனாமி அனர்த்தத்தில் இடம் பெயர்ந்து புதுக்குடியிருப்பு வேணாவில் வித்தியாசாலையில் தங்கி இருக்கும் முல்லை வாழ் மக்களுக்கு அதே பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் கடந்த 20 ஆம் திகதி சமைத்த உணவு வழங்கி அவர்களின் துன்பத்தில் கலந்து கொண்டனர். 175 இற்கு மேற்பட்ட உறவுகளோடு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் நலன் புரி நிலையப் பொறுப்பாளர் முல்லை மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளா சின்னண்ணை, முல்லை.மாவட்ட த.பு.க.பணிப்பாளர் செல்வன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் மதன்ராஜ் ஆகியோரும் இந்த ஆற்றுப்படுத்தல் நிகழ்வில் கலந்து கொண்டனர். (08)



புதுக்குடியிருப்பு-ஒட்டுசுட்டான் பிரதான வீதியில் புதுக்குடியிருப்பு ஐய னார் கோவிலடிப் பகுதியில் இரு பாரவூர்திகள் புதையுண்டு இருப்பதைப் படத்தில் காணலாம். வீதியினை திருத்துவதற்காக கொட்டப்பட்டுள்ள கிரவல் மண் வீதிக்கு மிக அண்மையாக கொட்டப்பட்டமையாலேயே வீதியை விட்டு விலகிச் செல்ல முற்பட்ட வேளையிலேயே இப்பாரவூர்திகள் புதையுண்டு காணப்படுகின்றன. இதனால் நேற்றுமாலை வீதிப்போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டது. (படம்:செல்வா)

## மன்னாரில் பல் வேறு பணிகளில் மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம்

(மன்னார்)

மன்னாரில் மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் பல சேவைகளை ஆற்றி வருகின்றது.

இதற்கான அலுவலகம் மன்னார் ஆஸ்பத்திரி வீதியில் திறக்கப்பட்டு இயங்கிவருகின்றது.

இவ் அமைப்பின் முக்கிய நோக்கம் 2006 ஆம் ஆண்டில் இடப் பெயர்வுகளை முடிவிற்கு கொண்டுவர வேண்டுமென்பதாகும். இந்தியாவிலிருந்து வரும் அகதிகளுக்கு அவர்கள் தேவைகளை அறிந்து வழிபடுத்தல் போன்ற விடயங் களை ஆற்றி வருகின்றது (18)

# ஐந்து வருடங்களுக்கு தேர்தல் இல்லை! சந்திரிகா கிளப்பியுள்ள புரளி அது

**–ஜே.வி.பி அமைச்சர் லால் காந்த**

ஐந்து வருடங்களுக்கு நாட்டில் தேர்தல்கள் நடத்தப்பட மாட்டாதென சனாதிபதி கூறியிருப்பது அவரது தனிப்பட்ட கருத்தாகும். அவர் இப்படியான புரளிகளை அடிக்கடி விடுவார். திடீரென மாறியும் விடுவார். என ஜே.வி.பி அமைச்சர் லால்காந்த தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், எம்முடன் கலந்தாலோசித்து இத்தீர்மானத்தை அவர் மேற்கொள்ளவில்லை. எனவே அவர் கூறுவதை உடனடியாக ஏற்க முடியாது. திடீரென இப்படியான புரளிகளை விடுவார். ஆனால் திடீரென மாறி விடுவார் அவர் கூறுவதை உடனடியாக ஏற்றுக்கொள்ளும் அரசியல்வாதிகள் உள்ளனர். ஆனால் தன்னிச்சைப்படி எதுவும் செய்ய முடியாது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் ஒப்பந்தம் உண்டு. ஆகவே குறிப்பிட்ட காலத்தில் தேர்தலை அவர் நடத்தியே ஆக வேண்டும் எனத் தெரிவித்தார்.

## இதய அஞ்சலிகள்



**செல்வி**

**சிறீஸ்கந்தராசா யுவதீபா**

செஞ்சோலையைச் சேர்ந்த எமது கல்லூரியில் தரம் 11 இல் கல்வி கற்ற மாணவியுமான செல்வி.சிறீஸ்கந்தராசா யுவதீபா அவர்களின் அகாலச்சாவையிட்டு எமது மனம் நெகிழ்ந்த இதய அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

**கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரிச் சமூகம்**

(5594)

## புகுமுக மாணவர் கலந்துரையாடல்

முல்லை கல்வி வலயத்துக்குட்பட்ட பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் அனைவருக்குமான அவசர கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு புகுமுக மாணவர் ஒன்றிய வளாகத்தில் நடைபெறவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ மாணவர் அமைப்பினர் கேட்டுக் கொள்கின்றனர்.

## தமிழர் புனர்வாழ்வுக் கழக முகாமைத்துவக் கல்லூரியின் AAT கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியுடையவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன

☞ தகைமைகள் ஆகக்குறைந்தது க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

☞ விண்ணப்பப்படிவங்களை 05.02.2005 இற்கு முன்னதாக AAT கற்கை நெறி முகாமைத்துவக் கல்லூரி, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முதன்மைச் செயலகம், கிளிநொச்சி. என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும். மாதிரி விண்ணப்பப்படிவங்கள் கணினி மையம் (TCC) கிளிநொச்சியில் பெற்றுக் கொள்ளலாம்.

☞ ஏற்கனவே நடைபெற்று கடல் அனர்த்தத்தால் இடை நிறுத்திவைக்கப்பட்டிருந்த வகுப்புக்கள் 29.01.2005 இல் இருந்து தற்காலிகமாக கணினி பயிற்சி நிலையம், கிளிநொச்சியில் நடைபெறும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

☞ மேலதிக விபரங்களுக்கு முகாமைத்துவக் கல்லூரி, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முதன்மைச் செயலகம், கிளிநொச்சி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- விரிவுரைகள் யாவும் சனி,ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

நிர்வாகம்
முகாமைத்துவக் கல்லூரி,
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்

(சி.11094)

# ஆசியாவில் ஏற்பட்ட சுனாமியால் அமெ. கிணறுகளில் நீர் மட்டம் உயர்வு

## நிபுணர்கள் ஆச்சரியம்

(வோஷிங்டன்)

**ஆசிய நாடுகளில் கடந்த 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமியால் அமெரிக்க நாட்டின் கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இது நிபுணர்களை ஆச்சரியப்பட வைத்துள்ளது.**

கடந்த டிசம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட 'சுனாமி' இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் பேரழிவை ஏற்படுத்தியது. 2 லட்சம் பேர் உயிரிழந்துள்ளார்கள்.

இந்தச் சுனாமியால் அமெரிக்காவில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து இருப்பதாக கூறப்பட்டு வருகிறது. இது குறித்து நிபுணர்களை ஆய்வு செய்து வருகிறார்கள்.

அதாவது அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் இருக்கும் ஆழ்துளை கிணறுகளில் 4 அங்குலம் அளவுக்கு நீர் மட்டம் உயர்ந்திருக்கின்றது. இதனை வடக்கு புளோரிடாவில் உள்ள நீர் வளத்துறை நிபுணர்களும், நீர் நிர்வாகத்துறை அதிகாரிகளும் கண்டுபிடித்துள்ளார்கள்.

ஆசியாவில் இருந்து சுமார் 12,800 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் சுனாமியின் தாக்கம் எதிரொலித்து இருப்பது நிபுணர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இது குறித்து நிபுணர் ஜான் முல்லிசன் கூறியதாவது:-

"இது கடந்த 26ஆம் திகதி சுமாத்திராவில் ஏற்பட்ட நிலநடுக்கம், சுனாமி பேரலை காரணமாக நிகழ்ந்திருக்கும் என்று கருதுகிறோம். பொதுவாக புளோரிடா பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் மெதுவாகவே உயரும். ஆனால் தற்போது திடீரென உயர்ந்திருப்பது வழக்கத்துக்கு மாறானது 'சுனாமியின் வேகத்தில் தான் இது ஏற்பட்டிருக்க முடியும்." இவ்வாறு அவர் கூறினார்.

மற்றொரு அதிகாரி ராண்டி சுமித் கூறுகையில், "உண்மையிலேயே இது ஆச்சரியமான ஒன்று. நாங்கள் இதுவரை இப்படிக் கண்டதில்லை" என்றார். இதனால் புளோரிடா பகுதிக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்றும் விஞ்ஞானிகள் கூறினார்கள்.

புளோரிடாவை போலவே அமெரிக்காவின் மற்ற மாநிலங்களில் உள்ள ஆழ்துளை கிணறுகளிலும் நீர் மட்டம் உயர்ந்து இருப்பதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.



இந்தோனேசியாவில் ஆசேமாகாணத்தில் இராணுவத்தினர் ஒரு வீதியினைத் துப்புரவு செய்கின்றனர்.

# புறப்பட்ட சிறிது நேரத்தில் வீழ்ந்து நொருங்கிய அமெ.விமானம்

### -5 பயணிகள் பலி-

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கன்ஸாஸ் மாகாணத்தில் பயணிகள் விமானம் குடியிருப்புப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை விழுந்து தீப்பிடித்தது. இதில் விமானத்தில் இருந்த 5 பயணிகள் உயிரிழந்தனர்.

5 பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட விமானம் சிறிது நேரத்தில் கீழே விழுந்தது. அந்த இடத்தில் இருந்த விளக்குக் கம்பத்தையும் பல மரங்களையும் சேதப்படுத்தியவிமானம், வீடு ஒன்றின் மீது மோதி நின்றது. வீட்டின் பெரும்பகுதி இடிந்து விட்டது. 2 வாகனங்களும் சேதமடைந்தன. குடியிருப்புப் பகுதியில் உயிரிழப்பு இல்லை.

# ஊழல் வழக்கில் சிக்கியுள்ள தென்னாபிரிக்க பா.உறுப்பினர்கள்

(ஜொகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு வழங்கப்படும் பயணப்படி மற்றும் விமான டிக்கெட் போன்றவைகளை முறைகேடாக பயன்படுத்துவதாக புகார்கள் கூறப்பட்டன. இதனை தொடர்ந்து குற்றத் தடுப்பு பொலிசார் விசாரணை நடத்தினார்கள்.

இதில் 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் சிக்கினார்கள். இந்த 40 பேர் மீது நீதி மன்றில் வழக்கு தொடரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரம் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று தெரிகிறது.

பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் 400 பேர். இவர்களில் 10 சதவீத எம்.பிக்கள் இந்த ஊழலில் சிக்கி இருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# உணவு விடுதிக்கு நீதி மன்று அபராதம்

(ரோம்)

இத்தாலி நாட்டில் உள்ள ஒரு பிரபல உணவு விடுதில் ஒருவர் பீசா வாங்கிச் சாப்பிட்டார். அவர் ருசித்து சாப்பிடும்போது பெரும் அதிர்ச்சி அவருக்குக்காத்திருந்தது. பீசாவில் மனிதப் பல் இருந்தது.வேறு வழி தெரியாமல் பணத்தையும் கொடுத்து விட்டு திரும்பினார். பிறகு அந்த நிறுவனத்தின் மீது வழக்குத் தொடுத்தார்.இதில் அந்த நிறுவனத்துக்கு ரூ.1இலட்சத்து 80 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

# கம்பாலா அகதி முகாமில் தீ எட்டுப் பேர் உடல் கருகிப் பலி

(கம்பாலா)

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான உகாண்டாவில் உள்நாட்டுப்போர் நீண்டகாலமாக நடந்துவருகிறது. அரசு ஆதரவு இராணுவத்துக்கும், பிரபுக்கள் பாதுகாப்பு படையினருக்கும் இடையே 18 ஆண்டுகளாக நடந்து வரும் சண்டையில் தினமும் பலர் பலியாகி வருகிறார்கள்.

இந்த மோதல்களில் ஆயிரக்கணக்கானவர்கள் வீடு வாசல்களை இழந்து அகதிகளாக முகாம்களில் தங்கி உள்ளனர். தலைநகர் கம்பாலாவில் உள்ள ஒரு முகாமில் திடீர் என்று தீப் பிடித்துக்கொண்டது. இந்த தீயில் 500க்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து சாம்பரானது. 8 பேர் தீயில் கருகிப் பலியாகினார்கள். 20 இற்கும் மேற்பட்டவர்களுக்கு தீக்காயம் ஏற்பட்டது.



தாய்லாந்தினுடைய உஷ்ண வலய உல்லாசப் பயணிகளின் தீவான புக்கெற்றின் கமலா கடற்கரையில் சுனாமியாற் பாதிப்படைந்த தனது சமயலறையில் தாய்லாந்துப் பெண்மணி ஒருவர் உணவு தயாரிக்கிறார்.



உக்ரேனின் கெவ்வில் நகரில் நேற்று (ஞாயிறு) அமெரிக்க ராஜாங்கச் செயலர் கொலின் பவலுடன் உக்ரேனிய சனாதிபதி விக்ரர் யூசென்கோ (இடம்) உரையாடுகின்றார்.

# உக்ரேனில் புதிய சனாதிபதி நேற்று பதவியேற்பு

உக்ரேனின் புதிய சனாதிபதியாக யூசன்கோ நேற்றுப் பதவியேற்றுள்ளார். கியு நகரத்தில் அமைந்துள்ள சுதந்திர சதுகத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த தலைவர்களும இராஜதந்திரிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் முன்னாள் பிரதமர் பெற்றிருந்த வெற்றியை உக்ரேன் உயர் நீதி மன்றம் நிராகரித்ததைத் தொடர்ந்து இரண்டாவது தடவையாக வாக்களிப்பு நடைபெற்றது. இதில் யூசன்கோ வெற்றி பெற்றுள்ளார்.

இவரது வெற்றிக்கு அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

# குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கக்கோரி குழந்தைகள் பேரணி


(மனிலா)

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க வேண்டுமெனக் கோரி பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் குழந்தைகள் ஆயிரக் கணக்கில் கலந்து கொண்ட பேரணி நடைபெற்றது. பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகளும் தெருவோரக் குழந்தைகளும் இதில் கலந்து கொண்டு கோஷமிட்டபடி சென்றனர். குழந்தைகளுக்கு கட்டாய கல்வி அளிப்பது உட்பட பல்வேறு சட்டங்களை அரசு இயற்ற வேண்டும் என்றும் அவர்கள் கோஷம் போட்டனர்.

# பேருந்து பள்ளத்தில் வீழ்ந்தது நேபாளத்தில் 42 பயணிகள் பலி

நேபாளத்தில் பயணிகள் பேருந்து ஒன்று பள்ளத்தில் வீழ்ந்ததில் 42 பயணிகள் பலியாகியுள்ளனர். நேபாள நாட்டின் சோனாபூர் மலைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஒரு பேருந்து சென்று கொண்டிருந்தது. இதில் திருமண கோஷ்டியினர் பயணம் செய்தனர். அப்போது எதிர்பாராத விதமாக அந்தப் பேருந்து மலைப்பிரதேச பள்ளத்தில் தலைகுப்புற கவிழ்ந்தது. இதில் அந்தப் பேருந்தில் பயணம் செய்த 42 பயணிகள் அதேஇடத்தில் பலியானார்.

17இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. இந்தக் கோர விபத்து நேபாளத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



. தென் கொரிய பொலிசார் ஒருவர் உலுங்தீவிற்கு அண்மையாக வடகொரிய வள்ளம் ஒன்றினைச் சோதனையிடுகின்றார்.

# அம்பாறையில் தொடர் அடைமழையால் அறுவடைக்கான நெல்வயல்கள் பாதிப்பு!

### -திருக்கோயில் பிரதேசத்தில் 5000 ஏக்கர் வெள்ளத்தில் மூழ்கின

(மட்டக்களப்பு)

**அம்பாறையில் தற்போது பெய்துவரும் அடைமழையால் அறுவடைக்கு தயாராகவிருந்த நெல்வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பெருமளவு ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதாகவும் வெளியான தகவல்கள் தெரிவிக்கின்றன.**

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடைமழைகாரணமாக திருக்கோயில் பிரதேசத்திலே 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்கள் பாதிப்படைந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டத்தில் மொத்தமாக 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விளை நிலங்கள் தொடர்ச்சியாக பெய்த மழைகாரணமாக பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அறுவடைக்கு இன்னமும் இரண்டு மூன்று நாட்கள் இருக்கின்ற இந்த நேரத்தில் இடைவிடாது பெய்துவரும் மழைகாரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் மேலும் கவலை தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மீன்பிடித் தொழிலையும், விவசாயத்தையும் நம்பிவாழுகின்ற இப்பிரதேசத்திலே மீன் பிடித்தொழிலுக்கு சுனாமி கடல் கொந்தளிப்பு முற்றுப் புள்ளி வைத்துள்ளது.

அதனைத் தொடர்ந்து விவசாயத்திற்கும் இடைவிடாது பெய்து வரும் மழை தடையாக விருப்பதாக மக்கள் மிகுந்த கவலை தெரிவிக்கின்றனர். (48)

## மீண்டும் இயங்குகிறது

முல்லை தெற்கு (செம்மலை) பனைதென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் சுனாமியால் பாதிக கப்பட்டு இடம் பெயர்ந்து 18.01.2005 தொடக்கம் பழைய இடத்தில் இயங்குகின்றதென பொது முகாமையாளர் இ.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார். (20)

## கோதுமை மாவின் விற்பனை விலை முப்பது ரூபாவாக தீர்மானம்

(அலுவலக செய்தியாளர்)

மக்கள் நலன் கருதிக் கோதுமை மாவின் ஆகக் கூடிய விற்பனை விலை (1.கி.கி) 30 ரூபாவென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித் துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

வெதுப்பக மாவின் வன்னி, யாழ். விற்பனை விலை 1கி.கி 30.00 ரூபாவெனவும் இன்று 24ஆம் திகதி முதல் இவ்விலை நடைமுறைக்கு வருவதாகவும் தெரிவித்துள்ளதுடன் இவ்விலையினை விடக் கூடுதலான விலையில் மாவினை விற்பனை செய்ய வேண்டாமெனவும் வாணிபர்கள் அனைவரையும் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (சோ)

## கால்நடை வைத்திய உபநிலையம் திறக்கப்படுவதில் தாமதம் ஏன்?

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கால் நடை வைத்திய உப நிலையம் கடந்த ஆண்டு மாங்குளத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளதுடன் இன்றுவரை திறந்து வைக்கப்படவில்லை.

மேலும் அவ்வளாகத்தைச் சுற்றி பற்றைக் காடுகளாகவே காணப்படுவதுடன் கட்டடத்தின் கதவுகளும் உடைக்கப்பட்டு காணப்படுகின்றன.

இந்நிலையம் திறக்கப்படாமையினால் 24 கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஒட்டுசுட்டான் கால்நடை வைத்திய நிலையத்திற்கே செல்ல வேண்டியுள்ளது. (05)

## தமிழர் புனர்வாழ்வுக் கழக தொண்டர்களுக்கு சமூக வலுவூட்டல் பயிற்சி நெறி

(முல்லை)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பழைய புதிய தொண்டர்களுக்கான சமூக வலுவூட்டல் பயிற்சி வகுப்பு கடந்த 20.01.2005 அன்று காலை 10.30 மணிக்கு முல்லைத் தீவில் அமைந்துள்ள முல்லை.மக்கள் நலன்புரிச்சங்க பழைய இடத்திலே மு.ம.ந.ச. இணைப்பாளர் பாலசுப்பிரமணியம் தலைமையில் ஆரம்பமானது.

பயிற்சிகளைத் தமிழர் புனர்வாழ்வுக்கழக வடகிழக்கு மாகாண சமூகவலுவூட்டல் உத்தியோகத்தர் மலரவன், த.பு.க. நடுவப்பணிமனையைச் சேர்ந்த சதீஸ் ஆகியோர் வழங்கினார்கள். இக்கலந்துரையாடலில் துறைமுக அலையில் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்புக்குப் பொறுப்பாக உள்ள த.பு.க. பணிப்பாளர் மூர்த்தி கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்கினார்.

30 தொண்டர்கள் இப்பயிற்சியில் கலந்து கொண்டார்கள். கூடுதலாக அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் புதிய தொண்டர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

இப்பயிற்சியின் நோக்கம் துறைமுக அலையினால் (சுனாமி) பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணப்பணிகளுக்கும் புள்ளிவிபரங்களை எவ்வாறு எந்த வகையில் திரட்டுவது தற்காலிகக் கொட்டகைகளில் தங்கவுள்ள மக்களின் பணிகளில் எவ்வாறு செயற்பட வேண்டும். போன்ற விடயங்கள் செயல்முறை மூலம் பயிற்சிகளாக வழங்கப்பட்டது. (20)

## உந்துருளியில் சென்ற இருவர் வீதியோர மரம் வீழ்ந்ததில் படுகாயம்

முழங்காவிலில் இருந்து ஜெயபுரம் நோக்கி உந்துருளியில் வந்து கொண்டிருந்தவர்கள் மீது ஜெயபுரப் பாடசாலைக்கு முன்பாக பிரதான வீதியில் இருந்த மரம் வேரோடு சாய்ந்து விழுந்ததில் இருவர் படுகாயமடைந்தனர்.

மேற்படி மரம் உந்துருளி மீது விழுந்ததில் அதில் வந்தவர்களான உதயச்சந்திரன் (வயது 37) என்பவரும் மற்றுமொருநபரும் தூக்கியெறியப்பட்டு ஆபத்தான நிலையில் அங்கு நின்றவர்களால் தூக்கப்பட்டு ஹோலிகுறோஸ் மூலம் முழங்காவில் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ போக்குவரத்துக் கழகப் பேருந்தில் பயணிக்கும் போது தவற விடப்பட்ட சபாரத்தினம் விக்கி னேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை இல 752274290 V மற்றும் சில ஆவணங்களும் சபாரத்தினம் சாந்திதேவியின் கைப்பையுடன் பயண அனுமதி அட்டைகளும், செபமாலை நாயகம் அன்ரனி மரியதாஸ் சக்கோட்டை வடமராட்சி வடக்கு ஆகியவரது நிவாரண அட்டை மற்றும் உடுபுடவைகளுடன் கூடிய (கைபாக்) பிரயாணப்பை என்பன கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி கரடிப் போக்கு சந்திக் கருகாமையில் அமைந்துள்ள த.போ.க உசாவல் பகுதியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளனர்.

✡✡✡✡✡

(ஒட்டுசுட்டான்)

சுனாமி அலைத் தாக்கத்தின் பின் முல்லைத்தீவில் இருந்து தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நாகமணி சுரேஸ்குமார் (753260 102-V) ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம் என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ஒட்டுசுட்டான் அரசியல்துறை செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (05)

## கடும்மழையால் விவசாயிகள் பாதிப்பு

(ஒட்டுசுட்டான்)

தொடர்ந்து பெய்த மழையினால் நெற் பயிர்கள் சேதமடைந்துள்ளன.

கடந்த மூன்று நாட்களுக்கு மேலாக தொடர்ந்து பெய்து வரும் மழையினால் நெற் பயிர்கள் சேதமடைந்துள்ளன. அறுவடைக்குத் தயாரான, அறுவடைசெய்த நெல் என்பன நீரில் மூழ்கியதுடன் இப்பகுதிக் குளங்களும் மீண்டும் நிரம்பி வழிகின்றமையினால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற் செய்கை பாதிப்படைந்துள்ளது. (05)

## ஓய்வூதியம் வழங்குவதற்கான திகதிகள் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகமூடாக ஓய்வூதியம் பெற்று வருபவர்களுக்கு 2005 ஆம் ஆண்டிற்கான மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவுத்திகதிகள் பின்வருமாறு,

சனவரி 12, பெப்ரவரி 10, மார்ச் 10, ஏப்ரல் 07, மே 12, யூன் 9, யூலை 12, ஆகஸ்ட் 11, செப்ரெம்பர் 08, ஒக்டோபர் 06, நவம்பர் 10, டிசம்பர் 08, மேற்படி மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு அட்டவணை கிளிமாவட்ட அரச செயலகத்தினால் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## சுனாமியால் பாதிப்புற்றோரின் விபரம் திரட்ட பதிவாளர் இல்லை

(முல்லை)

துறைமுக அலை (சுனாமி)யினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பதிவு செய்வதற்கு சரியான முறையில் பதிவாளர் இல்லாத்தினால் மக்கள் பெரும் இன்னலை சந்தித்துள்ளதாக கள்ளப்பாடு கிராம அலுவலர் சேந்தன் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் இறந்த மக்களைப் பதிவு செய்யாததினால் அதற்கான கொடுப்பனவையோ, வேறு தேவைகளுக்கோ இறப்பு பதிவு இல்லாத்தினால் தமது பகுதி மக்கள் சிரமப்படுவதாகவும் பதிவாளர் ஒரு அலுவலகத்தில் இருந்து இப் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (20)

## மாதர் சங்க நிர்வாகம் தெரிவு

கடந்த 21ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பரந்தன் உமையாள்புரம் கிராம புதிய மாதர் சங்கத் தெரிவு இடம்பெற்றது. உமையாள்புர கிராம சேவையாளர் சுகுமார் தலைமையில் அகவணக்கத்துடன் இந் நிகழ்வு ஆரம்பமானது. மாதர் சங்கம் பற்றிய கருத்துரைகளைப் பரந்தன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் க.ஈகைவீரன் மற்றும் கண்டாவளைப் பிரதேச செயலக கிராம முன்னேற்றச்சங்க உத்தியோகத்தர்ஐங்கரவேல் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து புதிய மாதர்சங்க நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. இதில் தலைவர்- திருமதி.புலேந்திரன்-பூரணம், செயலாளர்-திருமதி.சி.கேதாரகௌரி, பொருளாளர்-திருமதி. கு.நகுலேஸ்வரி மற்றும் உபதலைவர், உப செயலாளர் உட்பட 8 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## இன்று 'காத்தவராயன்' சிந்துநடைக்கூத்து

(அலுவலக செய்தியாளர்)

திருநகர் ஸ்ரீமுத்துமாரி அம்மன் நாடகமன்றத்தின் பெண் கலைஞர்கள் பங்கேற்கும் "காத்தவராயன்" சிந்து நடைக்கூத்து இன்று பிற்பகல் 5.00 மணிக்கு திருநகர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலைஞர்திருநகர் அ.வல்லிபுரத்தின் நெறிப்படுத்தலில் மேற்படி பாரம்பரியமான காத்தவராயன் சிந்து நடைக்கூத்து உருவாக்கப் பெற்று மீண்டும் அரங்கிற்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## சுனாமியால் பாதிப்புற்றோரை மீள்குடியமர்த்த சிரமதானப் பணி

(கண்டாவளை)

அண்மையில் ஏற்பட்ட சுனாமி பேரலையினால் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை மீள்குடியமர்த்துவதற்காக சிரமதானப்பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் சுண்டிக்குளம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து விசுவமடு, தர்மபுரம் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை மீளப்பாதுகாப்பாக குடியிருப்புகள் அமைத்துக் கொடுப்பதற்கு ஏதுவாக இனம் காணப்பட்ட சுண்டிக்குளம் வீதியில் உள்ள கல்லாறு கிராமத்தில் விசுவ மடு பிரதேச அரசியல்துறையினரின் ஒழுங்கு படுத்தலில் தொடர்ச்சியாக விசுவமடு வர்த்தக சங்கத்தினர், விசுவமடு விவசாய சங்கத்தினர், விசுவமடு விவசாய ப.நோ.கூ.சங்க பணியாளர், பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் மற்றும் கிராம சேவையாளர்களின் ஏற்பாட்டில் கிராம ரீதியாகவும் பொதுமக்கள் ஆகியோர் சிரமதானப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (14)

## பாலம் இன்மையால் பொதுமக்கள் சிரமம்

(அக்கராயன்)

ஸ்கந்தபுரம் பகுதியில் இயங்கி வரும் கரைச்சி பிரதேச செயலக உபபணிமனையிற்கு செல்வதற்கு பாலம் இன்மையால் பொது மக்கள் சிரமத்தினை எதிர் கொண்டு வருகின்றனர்.

பிரதான வீதியின் அருகில் அமைககப்பட்டுள்ள 4அடி ஆழமான நீர் வடிகால் கால்வாயிற்கு ஊடாக இறங்கிச் சென்றே பொது மக்கள் தமது அலுவலக கடமைகளை நிறை வேற்றி வருகின்றனர்.எனவே சம்பந்தப்பட்டவர்கள் இக்குறையினை நீக்க முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். (15)

## இலக்கத்தகடு வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேசத்தில் பாவனைக்குட்படுத்தப் பெற்று வரும் ஈருருளிகளுக்கு (துவிச்சக்கரவண்டிகள்) 2005ஆம் ஆண்டிற்கான உரிமம் (இலக்கத் தகடுகள்) கரைச்சிப்பிரதேச சபையி னால் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே ஈருருளி உரிமையாளர் கள் தங்கள் பாவனையிலுள்ள உந்துருளிகளின் உரிமங்களை கரைச்சிப பிரதேச சபை செயலகத்தில் அல்லது கரைச்சி பிரதேச செயலக உபபணிமனைகளிலோ பெற்றுக் கொள்ளலாமென கரைச்சிப்பிரதேச சபைச் செயலர் தெரிவித்துள்ளார். (சோ)

# தென்மராட்சியில் ஆட்டோ, உந்துருளி ஓட்டுநர்களிடம் தக்க ஆவணங்கள் இருந்தும் பணம் பறிக்கும் பொலிசார்

## ஆட்டோ ஓட்டுநர் குற்றச்சாட்டு

(தென்மராட்சி)

**சாவகச்சேரியில் ஆட்டோ ஓட்டும் சாரதிகளிடம் சரியான ஆவணங்கள் இருந்தும் குற்றப்பணம் என்று கூறி சிறிலங்காப் பொலிசார் பணம் பறித்து வருவதாக ஆட்டோ ஓட்டுநர் குற்றம்சாட்டியுள்ளனர்.**

ஆட்டோக்களை மறிக்கும் பொலிசார் தக்க ஆவணங்கள் இருந்தாலும் இலஞ்சம் கேட்டு மிரட்டுவதுடன் சம்பந்தமில்லாதவற்றைத் தெரிவித்து கேஸ் போடுவோம் என அச்சுறுத்தி ஆட்டோ சாரதிகளிடம் பணம் பறிக்கின்றனர். சிறிலங்காப் பொலிசாரின் இத்தகைய நடவடிக்கைகள் தற்போது உந்துருளிகளில் செல்வோர் மீதும் மேற்கொள்ளப்படுகிறது. தென்மராட்சியில் நிலை கொண்டுள்ள சிறிலங்காப் பொலிசாரின் இத்தகைய கேவலமான நடவடிக்கைகளினால் ஆட்டோ மற்றும் உந்துருளி ஓட்டுநர்களும், மக்களும் விசனம் தெரிவித்துள்ளனர். (28)

# சுனாமி நிவாரண முரண்பாட்டைக் கவனிக்க ம.உ.ஆ.குழு தலைமையகத்தில் குழு நியமனம்

யாழ்ப்பாணக்குடாநாட்டில் சுனாமிகடல் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கப்படும் அரச நிவாரண உதவிகளில் பாரபட்சம்,குறைபாடுகள் ஏதும் இருப்பின் அது குறித்து தமக்கு முறைப்பாடு செய்யலாம் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான அரச நிவாரண உதவிகளில் பாகுபாடுகள், குறைபாடுகள் என்பன நிலவிவருவதாக பலரும் குற்றம்சாட்டிவருகின்றனர். இதனடிப்படையிலேயே மக்களுக்கு ஏற்படுகின்ற குறைபாடுகள் பற்றி விசாரணைகளை மேற்கொண்டு மக்களுக்குள்ள குறைபாடுகளைப் போக்கும் விதமாகவே இது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் கவனம் செலுத்திவருகின்றனர்.

இதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்தால் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. (33)



கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் வடமராட்சி கிழக்கில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களோடு உரையாடுகிறார்

# சுனாமி பேரனர்த்தத்தால் யாழ்.மாவட்டத்தில் கல்வி உடமை இழப்புக்கள் 86.66மில்லியன் ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கிய "சுனாமி கடற்பேரனர்த்தங்கள் காரணமாக 86.66மில்லியன் ரூபா பெறுமதியிலான கல்வி உடமைஇழப்புகள் ஏற்பட்டிருப்பதாக யாழ் அரச செயலகக் கணக்கெடுப்புகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறான இழப்புகளில் பெரும் பாலானவை வடமராட்சி கிழக்கு மற்றும் வடமாட்சி வடக்குப் பகுதிகளிலேயே இடம்பெற்றுள்ளன.

அவற்றில் அலைத்தாக்கத்தினால் கரையோரப்பிரதேச பாடசாலைகளுக்கு ஏற்பட்ட கட்டட அழிவுகளின் இழப்பு 48.90 மில்லியன்ரூபா எனவும் பாடசாலை தளபாடங்களுக்கு ஏற்பட்ட அழிவுகளின் பெறுமதி 23.50 மில்லியன் ரூபா எனவும் பாடசாலைகளின் விளையாட்டு மற்றும் ஆய்வு கூட உபகரண அழிவுகளால் ஏற்பட்ட இழப்பு 14.26 மில்லியன் ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதவிட பெறுமதி கணிப்பிட முடியாதளவு இப்பிரதேச வாழ் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், புத்திஜீவிகள் எனப்பலரது கல்வி உடமைகளும் கடலினால் அள்ளிச் செல்லப்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. (33)

# கலாச்சாரம் பேணும் இளைஞர்களால் கசிப்புடன் குடும்பஸ்தர் பிடிக்கப்பட்டார்

ஒருபோத்தல் கசிப்பினை வைத்து அருந்திக் கொண்டிருந்த சக்கோட்டைச் சேர்ந்த குடும்பஸ்தரை கலாச்சாரம் பேணும் இளைஞர்கள்கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.மேற்படி நபரின் மனைவி அக்கிராமத்தின் கலாச்சாரம் பேணும் இளைஞர்களிடம் முறையிட்டதனையடுத்து அங்கு சென்ற இளைஞர்கள் மேற்படி நபரை ஒரு போத்தல்கசிப்புடன் மடக்கிப்பிடித்து உடனடியாக வல்வெட்டித்துறை அரசியல்துறையினரிடம் ஒப்படைத்தனர்.அண்மையில் பருத்தித்துறை நகர்ப்பகுதியில் கசிப்பு ராணிக்கு எச்சரிக்கை செய்யுமுகமாக எல்லாளன் படை என்ற பெயரில் எச்சரிக்கைப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்தமை தெரிந்ததே.

ஆனபோதும் சிலரால் திட்டமிட்டு திருட்டுத்தனமாக கசிப்பு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றதோடு சமூகங்களைச் சீரழிக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறான சீரழிவுகளில் இருந்து பொதுமக்களைக் காப்பாற்ற வேண்டிய சம்பந்தப்பட்ட தரப்பினர் மாறாக ஊக்கமளித்து வருகின்றனர்.இவ்வாறான சமூகவிரோதச் செயல்களை இல்லாதொழிக்க வேண்டுமென கலாச்சாரம் பேணும் இளைஞர்கள் தெரிவித்துள்ளனர். (கா)



பருத்தித்துறைப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுடன் யாழ்.பல்கலை துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் கலந்துரையாடுகையில்

# சர்.மாணவர் பேரவையினர் இரத்ததானம் வழங்கினர்

சுனாமி அலையால் பாதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் நோயாளர்களுக்கு இரத்தம் போதாமையாக உள்ள காரணத்தால் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த 20இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் நேற்றுக் காலை இரத்ததானம்செய்துள்ளனர். (36)

# சுனாமியின் தாக்கத்தால் வடமராட்சியில் நன்னீர் கிணறுகள் உவராகின

(யாழ்ப்பாணம்)

'சுனாமி' கடற்பேரனர்த்தத்தின் தாக்கத்தால் யாழ்.வடமராட்சியின் கடற்கரையோர பிரதேசத்தில் அமைந்திருந்த பல நன்னீர்க் கிணறுகள் உவர்த்தன்மையடைந்திருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுனாமி கடற்பேரலையால் இப் பிரதேசங்களைச் சேர்ந்த நன்னீர் கிணறுகளும் கடல் நீரினால் நிரவப்பட்டதுடன் அசுத்தப்படுத்தப்பட்டுமிருந்தன.பின்னர் இக் கிணறுகள் பலவும் தொண்டர்களால் இறைத்து சுத்தம் செய்யப்பட்டன எனினும் கிணற்று நீரின் உவர்த்தன்மை (சவர்) மாறாதுள்ளது. இதனால் மக்கள் குடி நீரைப் பெற்றுக் கொள்வதில் பல இடர்பாடுகளையும் சந்தித்து வருகின்றனர். (33)

# பதவியா நீர்த் தேக்கத்தின் கதவுகள் திறக்கப்பட்டன

(கொழும்பு)

பதவியா நீர்த்தேக்கத்தின் கதவுகள் திறந்து விடப்பட்டதனால் அநுராதபுரம் மற்றும் பதவியா பகுதிகளிலுள்ள பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன. பதவியா நீர்த்தேக்கத்தின் உச்ச எல்லையை விட நீர் மட்டம் உயர்ந்ததால் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# முஸ்லிம் பிரமுகர்கள்–புலிகள் இன்று மட்டு. இல் சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான இரு தரப்பு உறவுகள் தொடர்பாகவும், இரு சமூகங்களையும் சேர்ந்த மக்கள் எதிர்நோக்கும் அன்றாட பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயவென மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் புத்திஜீவிகளுக்கும், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாண முக்கியஸ்தர்களுக்குமிடையிலான உயர் மட்ட சந்திப்பொன்று கொக்கட்டிச் சோலையிலுள்ள விடுதலைப் புலிகளின் பிராந்திய அரசியல் துறைப் பணிமனையில் இன்று முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் புலிகள் இயக்கத்தின் சார்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையிலான குழுவினரும் முஸ்லிம்கள் சார்பில் ஏறாவூர், காத்தான் குடி, கல்குடா பிரதேச பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தைச் சேர்ந்த 15 பேரும் இதில் கலந்து கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சந்திப்பின்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் எதிர்கால சமூக பொருளாதார விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.

# தேசியக்கொள்கை அடிப்படையிலான அரசே நாட்டிற்கு நீண்டகால நன்மையை உருவாக்கும்

## - எதிர்க்கட்சித்தலைவர் ரணில் வலியுறுத்து

(கொழும்பு)

சிறிலங்காவில் கட்சி அரசியலுக்கு அப்பால் தேசியக்கொள்கையின் அடிப்படையில் அரசாங்கம் ஒன்று செயற்படுமானால் அது நாட்டுக்கு நீண்ட கால நன்மையைக் கொண்டுவரும் என சிறிலங்காவின் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாவனல்லையில் இடம்பெற்ற நாட்டைக் கட்டியயெழுப்புவோம் என்ற தொனியிலான மக்கள் சந்திப்பு ஒன்றின்போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்

சிறிலங்கா கட்சி அரசியலுக்கு அப்பால் தேசியக் கொள்கையின் அடிப்படையில் அரசாங்கம் ஒன்று இயங்குமாயின் அது நாட்டுக்கு நீண்ட கால நன்மையைக் கொண்டு வரும்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் அட்டல் பிஹாரி வாஜ்பாயுடன் இரண்டு முறை இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் பேச்சு நடத்தியதாகத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க அடுத்து ஆட்சிக்கு வந்துள்ள காங்கிரஸ் கட்சியும் அதேகொள்கையைக் கடைப்பிடிப்பதாகத் தெரிவித்தார்

கம்யூனிஸ் கொள்கையைக் கொண்டுள்ள ஹங்கேரி, போலந்து நாடுகளும், அதேபோன்று இராணுவ ஆட்சியின் கீழ் இருந்த தென்கொரியாவும் தேசியக் கொள்கை காரணமாக அரசியல் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் முன்னேறியுள்ளன என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

1956 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமையிலான அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட தனிச்சிங்களச் சட்டமே சிறிலங்காவின் இனப்பிரச்சினைக்கு வழியை ஏற்படுத்திக் கொடுத்தது

அந்தச் சட்டமே இலங்கையில் இனவாதத்தைத் தூண்டி விடுவதற்கு ஆரம்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது

இதனையடுத்து 1976 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்ட தமிழர்களின் உரிமைகளைப் பறித்த செயற்பாடானது இலங்கையில் இனப்பிரச்சினையின் தீவிரத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது

இதற்கு முன்னர் 1948 ஆம் ஆண்டுக்குப் பின் வந்த காலப்பகுதியில் ஆட்சி புரிந்த டி எஸ் சேனாநாயக்க இலங்கையை ஆசியாவில் ஜப்பானுக்கு அடுத்த படியான வளர்ச்சியடைந்த நாடாக மேம்படுத்தியிருந்தார்.

எனினும் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியைத் தோற்கடிக்கவேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திர கட்சியின் அரசாங்கம் பொருளாதாரத்தை சீரழியச் செய்தது

அதேபோலவே ஏனைய வருடங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தை தோற்கடிக்க வந்த சிறிலங்கா சுதந்திர கட்சி பொருளாதார சீரழிவுக்கு நாட்டை இட்டுச்சென்றது எனத் தெரிவித்த அவர், இலங்கையில் அரசியல் கட்சிகள் மாறினாலும் மாறாத தேசியக் கொள்கை ஒன்று வகுக்கப்படுமானால் அது நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும் எனக் குறிப்பிட்டார்.

# சீறியடித்து எழுந்த அலை எனக்குப் பின்னால் போய் வீழ்ந்தது

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

**முல்லைத்தீவுக் கடலில் கரையிலிருந்து 75 மீற்றர் தூரத்தில் கடலுக்குள் நின்று தூண்டில் போட்டு மீன் பிடித்துக்கொண்டிருந்து அலையுடன் சிக்குண்டு தப்பிய முல்லைத்தீவு வட்டுவாகலைச் சேர்ந்த53 வயதுடைய ஆறுமுகம் இந்திரராஜா என்பவர் தான் அனுபவித்த துயரங்களை விபரிக்கிறார்.** பகுதி-06

அ.லோகீசன்

அவரிட்ட போய் 'ஐயா என்ன யோசிக் கிறீங்கள் நாங்கள் காவல்துறை உங்களைக் காப்பற்றத்தான் வந்தனாங்கள். என்னண்டு சொல்லுங்கோ என்றோம்" அவர் எதையுமே சொல்லவில்லை. முறைத்தபடி நாங்கள் சொல்வதைக் கேட்காத மாதிரி இருந்தார். திருமண வீட்டிற்கு பெண்கள் அணியும் காஞ்சிபுரம் சேலையை அந்த ஐயா இடுப்பில் கட்டிக்கொண்டிருந்தார். பல நிமிடங்களாக எங்களுடன் கதைக்கவேயில்லை. திடீரென்று 'எனக்கு எல்லாமே முடிஞ்சு போச்சுது எனி என்ன ஒரு உதவியும் வேண்டாம் என்ர வீடு போட்டுது மனைவி பிள்ளைகள் எல்லாமே போய்ச் சேந்திட்டுதுகள். எனக்கு உடுப்பே இல்லாமல் எங்கையோ பறந்துவந்த சூறையைக் கட்டிக்கொண்டு என்ர மானத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறன். இனி எனக்கு என்ன இருக்கு நான் என்னத்தைச் சொல்லுறது" என்று பரிதாபமாகப் புலம்பி அழுதார். அவரையும் பின்னுக்கு அனுப்பிவிட்டுத் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தோம்.

அடுத்து ஒரு ஐயா அழுது புலம்பியவாறு கத்திக்கொண்டு நின்றார். அவரைப் போய்ச் சந்தித்து ஆறுதல் கூறினோம். அவரின் தலையில் பலமான காயம் இருந்தது. "தம்பி நான் கள்ளப்பாட்டுக் கடற்கரையில வலை பொத்திக்கொண்டு நின்றனான். திடீரென்று ஒரு சத்தம்கேட்டது. திரும்பிப் பார்க்க ஒரு பெரிய அலை வந்தது. நான் என்ர வீட்டுக்காரரக் காப்பாற்ற ஓடிப் போனன். நான் வீட்டை போகவும் அலை வரவும் சரியாய் இருந்தது. கடைசிப் பிள்ளையைக் கையில தூக்கிக்கொண்டு நான் தண்ணீருக்குள்ளால் அடிபட்டுப் போனேன் என்ன நடந்தது எண்டு எனக்கே தெரியாது. என் பிள்ளையை ஆரோ இழுத்துப் பறிச்சுக்கொண்டு போனமாதிரி அலை பறிச்சுக்கொண்டு போனது. பிள்ளை போக எனக்கும் மண்டையில் ஒரு அடி விழுந்தது. உடன நான் மேல கையைப் பிடிச்சன் அது ஒரு கட்டுமரம். என்னைக் கொண்டு வந்திட்டுது. இப்ப என்ர பிள்ளை எங்க எண்டு தேடுறன்." என்று புலம்பி அழுது கொண்டிருந்தார்.

அப்படியே நாங்கள் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டுபோக ஒரு ஐயா அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தார். அவரை என்ன என்று கேட்டோம். "நான் கடலில இருந்து இப்பதான் அலையில அடிபட்டு வந்தனான். நான் கடலில நிண்டே தப்பிட்டன். கரையில இருந்த என்ர குடும்பம் எப்படி எண்டு தெரியேல்ல. அதுகளைக் காணவேணும். அதுதான் தேடுறன்" எண்டார். அவர் கடலில் கண்டது என்ன எப்படித் தப்பினார் என்பதைத் தொடர்ந்து பாருங்கள்.

நான் வழமையாகத் தொழிலுக்குப் போறது போலத்தான் அண்டைக்கும் போனனான். என்னட்ட பெரிய மீன்பிடி வலைகள் எதுவுமில்லை. சின்ன வலைதான். அதால வட்டுவாகல் தொடுவாயில்தான் மீன்பிடிக்கிறனான். அண்டைக்கும் அப்படித்தான் விடியச் சாப்பிட்டுட்டு மீன்பிடிக்க வந்தனான். ஓரளவு சின்ன மீன்கள் பிடிபட்டன. எல்லாம் சின்ன மீன்கள் எண்டால் கொண்டுபோய் விக்க ஏலாது. அதால நான் என்ன செய்தனெண்டால் தொடுவாயால ஏறி என்ர சயிக்கிளையும் எடுத்துக்கொண்டு கடற்கரைக்குப்போய் அங்க இருந்த பெரியபனை மரத்துக்குக் கீழ் விட்டுட்டு கரையில இருந்து ஒரு 75 மீற்றர் தூரத்தில நெஞ்சளவு தண்ணிதான் வரும் அதில நிண்டு தூண்டில் போட்டு பெரிய மீனுகள் கொஞ்சம் பிடிச்சன். வழமையாக அதில கனபேர் வந்து தூண்டில் போட்டுமீன் பிடிக்கிறவங்கள். அண்டைக்கெண்டு ஒருத்தரையும் காணேல்ல. நான் தனியாகத்தான் கடலுக்குள்ள நிண்டனான். மெதுவாய் மழையும் தூறத் தொடங்கி விட்டது. அது மெல்லிய தூறல்தான் தூறிக் கொண்டு இருந்தது. அதால நான் கடலுக்குள்ளேயே நின்று தூண்டிலைப் போட்டுட்டு நிண்டன். பெரிசாய் மீனுகள் எதுவும் பிடிபடவில்லை. இண்டைக்கு எனக்கு அதிஷ்டமில்லைப்போல இருக்குதெண்டு எனக்குள் நினைத்தபடி மறுபடியும் தூண்டிலைப் போட்டேன். ஏதோ தெரியாது தூண்டில் என்ர கையில் சிக்குப்பட்டுப் போய்ச்சுது அந்த நேரம் ஒரு சின்ன வெடிச்சத்தம் கேட்டது. அதை நான் பெரிசுபடுத்தவில்லை. ஆனால் கடல் தண்ணீர் சாதுவாய்ச்சுட்டது. வெப்ப நீரோட்டம் வந்திருக்க வேணும். அதோட மீனும் வந்திருக்கும். தூண்டிலைப் போடுவமெண்டு தூண்டிலைச் சிக்கெடுத்தேன். எனக்கு முன்னால ஒரு பெரிய அலை பூதங்கள் ஒண் டாய் சேர்ந்து சீறிக்கொண்டு வந்தமாதிரி சீறியடித்து எழும்பியது. அந்த அலை எழும்பி எனக்குப் பின்னால போய் விழுந்தது.

அலை எழும்பிய வேகத்தில கடல் வட்டு



ஒன்று என்னை உள்ளுக்குள் இழுத்து விட்டது. நான் கடலுடன் போராடி ஒருமாதிரி எழும்பிவிட்டேன். எழும்பிய வேகத்தில் கரையை நோக்கி நீந்திப்போக வெளிக்கிட்டு. இரண்டு வலியும் வலிச்சிருக்க மாட்டன். பிறகும் முதல் மாதிரித்தான் சீறி அடித்துக்கொண்டு இரண்டாவது அலையும் வந்தது. வந்த அலை என்னடியில் வந்து தான் மேல்நோக்கி எழுந்தது. அப்படி எழுந்த பெரிய அலை என்னையும் கொண்டு ஒரு பனை அளவு உயரத்துக்குக் கொண்டு போய் நிலத்தில அடிச்சு உருட்டிக்கொண்டு போனது.

எனக்கு இப்பதான் பயம் வந்தது. முதல் பெரிய அலை உயரமாக மேல எழும்பேக்குள்ள நான் இப்படி ஒண்டும் நினைக்கேல்ல. கடலில் ஏதே ஒரு பெரிய அலை வந்துபோகுது என்றுதான் நினைச்சனான். ஆனால் இரண்டாவது அலை என்னையும் சேர்த்துக்கொண்டு எழும்பி உருட்டிக் கொண்டு போகேக்கதான் நான் ஊழிக்காலத்தில சிக்குப்பட்டுட்டன் எண்டு நினைச்சன்.

நான் தூண்டில் எறியேக்க வழமையாக இருந்த மாதிரி ஒரு வித்தியாசமும் இல்லாமல் அமைதியாக இருந்த இந்தக் கடல் இப்படி ஏன் அடிக்குது எண்டு எனக்குள்ள நினைச்சுக்கொண்டு அலையோட அடிபட்டுப் போய்க்கொண்டிருந்தன். அலை என்னை உருட்டி பனைவடலி, முட்பற்றைகள் எல்லாத் தோடையும் அடித்து உருட்டிக்கொண்டு போனது. என்னால எதுவும் செய்ய ஏலாமல் இருந்தது. இப்படியே போய்க்கொண்டிருக்க ஒரு மரத்தின் அடியில் பிடித்திருக்க வேண்டும் ஏனெண்டால் நான்பிடித்த பொருள் அந்தளவு பெரிசாய் இருந்தது. நான் மரத்தில் பிடிச்சவுடன உருட்டுற அலை என்னை விட்டுட்டுப் போய்விட்டது. நான் உடனே தண்ணிக்கு மேல் நோக்கி எழுந்தேன். பத்தைக்கு மேலாகத் தண்ணீர் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அந்த வேகத்தை என்னால சொல்லத்தெரியேல்ல. அது என்ன வேகம். நான் முதலை போல நீண்டு படுத்து தண்ணிக்கு மேலாகத் தெரிகின்ற பத்தைகளில பிடிச்சுப் பிடிச்சுக் கொஞ்சத்தூரம் போய்க்கொண்டிருந்தேன். திடீரென்று அலையின் வேகம் இன்னும் கூடியிருக்க வேணும். சுழிபோல வந்து நிலத்தை நோக்கி என்னை இரண்டு தடவைகள் தாட்டுவிட்டது. தண்ணி மூண்டுதரம் தான் பொறுக்கும் என்று கேள்விப்பட்டனான். அதால மூண்டாவது தரமும் என்னைத் தாட்டால்நான் செத்துப்போய்விடுவேன் என்று எனக்குள் நினைத்துக்கொண்டு அடிபட்டுப்போக என்னை யாரோ பிடிச்சுத் தண்ணிக்குள் இழுத்துக்கொண்டு போறமாதிரிக்கிடந்தது. அப்பிடியே கொண்டுபோய் ஒரு பத்தைக்குள்ள செருகியது. என்னைக் கொண்டு போன வேகத்தில பத்தையையும் பிச்சுக் கொண்டு அங்கால் பக்கமாகக் கொண்டு போனது. பத்தைக்குள் போகும் போது கொஞ்சம் தண்ணியும் குடிச்சிட்டன். இது தான் என்ர கடைசி எண்டும் நினைச்சன். ஏதோ காட்டுப் பூவரச மரத்தின்ர கொடி என்ர கையில் சிக்குப்பட்டுப்போய்ச்சு நான் அதைப் பிடித்து இழுத்து இழுத்து ஒரு மரக்கொப் பில் பிடித்துவிட்டேன். அந்த மரக்கொப்பில் பிடித்தபடி கடலில் இருக்கின்ற "கெங்கை அம்மனை" மனதில் நினைத்து நீ என்னை தாக்கப் போறியா...? இல்லாட்டிச் சாக்கொல்லப் போறியா...? என்ன செய்யப் போறாய்...? ஏன் இப்படி பாடுபடுத்திறாய் என்று மன்றாடினேன். மன்றாடிவிட்டு கண்ணைத் திறந்து பார்த்தேன் தண்ணி குறைந்திருந்தது. உடனே மரத்தில் இருந்து குதித்து இடுப்பளவு தண்ணிக்குள்ளால் ஓரளவு ஒதுக்கு நீர்பார்த்து கடற்கரை றோட்டிலுள்ள பீலியை நோக்கி ஓடி வந்தேன். அதுக்கு



வரக்கிடையில என்னை பெரிய ஆத்துக்குள்ள (வட்டுவாகல்) இழுத்துக்கொண்டு போக வெளிக்கிட்டுது. வட்டுவாகல் ஆத்துக்குள்ள போய்ச்சுது எண்டால் என்னால தப்பவே ஏலாது. என்ன செய்யிறது எண்டே தெரியவில்லை. தப்பிறதுக்கு எந்த வழியும் இல்லை. பக்கத்தில் நின்ற பயலி மரத்தை எட்டிக் கட்டிப்பிடித்து மெதுவாக மேல ஏறி இருந்தன். அடுத்த அலை ஒண்டு பெரிசா சீறிக்கொண்டு வந்தது. அது வந்த சத்தத்தைக் கேட்டாலே உயிர் போகும்போல கிடக்குது. அப்பிடிச்சத்தம் அது எங்களை எல்லாம் அடித்துத் தாண்டிக்கொண்டு போய்விட்டது. நான் இருந்த பயலி மரமும் கடுமையாக ஆடி வட்டுவாகல் ஆத்துக்குள் சரிந்துகொண்டிருந்தது. இதில இருக்கிறது ஆபத்து. வட்டுவாகல் ஆத்துக்குள் போனால் நான் தப்பமாட்டன் எண்டு நினைச்ச உடனேயே குதிச்சு றோட்டை நோக்கி கள்ளப்போருக்கு நடந்துவந்து முகத்துவாரத்துக்குப் பக்கத்துல இருக்கிற பீலியைப் பார்த்தேன். பனைமரங்கள் பத்தைகள் எல்லாம் கிறுகிறு எண்டு போய்க் கொண்டிருந்தன. அந்தப் பீலியாலும்வர முடியாது. இந்த நிலையில் கடலை நோக்கிப் போனேன். கடலை நோக்கிப் போக எனக்குப் பயமாகத்தான் இருந்தது. ஆனாலும் என்ன செய்வது இந்த ஊரில் பிறந்து வாழ்ந்ததால் வட்டுவாகல் காட்டில் திட்டிகள் பள்ளங்கள் எல்லாம் எங்க இருக்கிறது எண்டு தெரியும். ஒரு மாதிரி அதுகளுக்குள்ளால தப்பி வந்து ஊருக்குள்ள ஏறி வந்திட்டன்.

ஊருக்கு வந்துகொண்டிருக்க வட்டுவாகல் பின்னுக்கிருக்கிற குடியளின்ர உடுப்புக்கள், வீட்டுக்கூரைகள் எல்லாத்தையும் அலை அடிச்சுக்கொண்டு அரைப் பனை உயரத்தில் கடல் கொண்டு வந்தது. இதைப் பார்த்தவுடனேயே நான் வெருண்டு போனன். நான் இவ்வளவு நேரமும் வட்டுவாகல் தொடுவாய்க்குள்தான் கடல் இப்படிப் பெருகுது எண்டுதான் நினைச்சனான். ஆனால் இஞ்ச வந்த பிறகுதான் தெரிஞ்சது எல்லா இடத்தையும் கடல் மூடிப்போட்டுது எண்ட விசயம் .

இந்த நிலையில் என்ர வீடு பிள்ளைகள் மனைவி எல்லாம் எங்க அவர்கள் எப்படி என்ற யோசனை வந்துவிட்டது. நான் என்னை மறந்துபோய் அங்கும் இங்கும் அலைந்து புலம்பினேன். அந்த இடத்திற்கு வந்த போராளிகள் என்னை பிக்கப் வாகனத்தில் ஏறச் சொன்னார்கள். நான் 'வீட்டுக்காரரைப் பார்க்கபோறன்" எண்டு சொல்லிப்போட்டு நின்றேன்.

"அடுத்த அலை வந்தாலும் வரும் நீங்கள் இதிலிருந்து முதல் தப்புங்கோ. அவர்களை நாங்கள் தேடிப்பிடிச்சுத் தரலாம்" என்று கூறி என்னைத் தூக்கி ஏத்திக்கொண்டு போய்விட்டார்கள்.

பிறகு ஏதோ அந்தக் கெங்கை அம்மன் தான் காப்பாற்றியிருக்க வேணும். எல்லாரும் தப்பிப் போட்டினம் என்றார். இப்பத்தான் சொல்லினம் கடல் வத்தினது எண்டு. ஆனால் நான் கடலைப் பார்த்துக்கொண்டு நிண்டதால அதக் கவனிக்கவில்லை. கடவுளின் முயற்சி தொண்ணூறுவீதம் என்ர முயற்சி பத்து வீதம் இருந்ததால தான் தப்பினன் என்று தனது மரண அனுபவத்தை முடித்தா அந்த ஐயா.

இதனை முடித்துக்கொண்டு சம்பவ நேரம் வட்டுவாகல் பாலத்தின் முல்லைத்தீவுப் பக்கத்தில் சிக்குண்டு இப்படி ஒரு பெரிய அனர்த்தம் நடந்ததை வெளியில் அறிவித்துக்கொண்டிருந்த அதேவேளை ஜீரணிக்க முடியாத நெஞ்சை உலுப்பும் சம்பவம் ஒன்றையும் கண்ட வட்டுவாகல் சீர்திருத்தப் பிரிவு விசாரணை அதிகாரியுடன் தொடர்புகொண்டோம். அவர் கூறும் ஜீரணிக்க முடியாத நெஞ்சை உலுக்கும் சம்பவம் என்ன என்பதை அடுத்த பகுதியில் தருகிறோம். **தொடரும்...**

**13.**


➡ கொலம்பியாவின் தென்மேற்குப் பகுதியில் பிளக்ஹொாக் உலங்கு வானூர்தி ஈக்குவேடோர் நாட்டின் எல்லைப்பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 20 படையினர் பலி.

➡ கொசோவாவில் அமைதிப்பணியில் ஈடுபட்டிருந்த ஐ.நா.வின் பொலிஸ் அதிகாரி கார்க்குண்டுத் தாக்குதலில் பலி இவர் சோமாலியாவின் தென்மேற்குப் பகுதியான பிறிஸ் ரான் பகுதிக்கு கடமைக்குவாகனத்தில் சென்றவேளை கொசோவாவின் மேற்குப்பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றது.

**14.**

➡ காஸா எல்லைப் பகுதியில் பலஸ்தீன தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 6 இஸ்ரேலியர்கள் உடல் சிதறிப்பலியானதுடன் 3பலஸ்தீனியர்களும் பலி.

➡ வால் நட்சத்திரத்தில் துவாரம் போட்டு அதனுள் என்ன உள்ளது என்பதுபற்றி கண்டுபிடிப்பதற்காக "டீப் இம் பாக்ட்" எனப்படும் விண்கலத்தை அமெரிக்கா விண்ணில் செலுத்தியது.


டீப் இம்பாக்ட் பயணம்

➡ சூறாவளியும் பூகம்பமும் அடிக்கடி தாக்கும் தாய்வான் நாட்டின் தலைநகரில் உலகிலே மிக உயரமான 101 அடுக்கு மாடிக் கட்டடம் திறக்கப்பட்டது.

**15.**

➡ பங்களாதேஷத்திலும் தாய்வானிலும் நில நடுக்கம் ஏற்பட்டது. 20 விநாடிகள் நீடித்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 4.4 என பதிவாகியுள்ளது.

➡ ஈராக்கின் அபுகிராய்ப் சிறைச் சாலையில் ஈராக் பொதுமக்களை படுகொலை செய்தமை மற்றும் பல குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்ட நிலையில் அமெரிக்க இராணுவ அதிகாரி "சாள்ஸ் கிரைனருக்கு" 15 வருட சிறைத் தண்டனையை இராணுவ நீதிமன்றம் வழங்கியது.


15 வருடசிறை


அபாஸ்

➡ பலஸ்தீன சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட மகமூட் அபாஸ் பதவியேற்றார்.

➡ குவைத்தின் தென்பகுதியில் துப்பாக்கி தாரியொருவருக்கும் குவைத் பொலிசாருக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் ஆயுதபாணி ஒருவர் மரணம்.

➡ பாக்தாத்தின் வடக்கே அமெரிக்க இராணுவத்தாக்குதலில் 2 ஈராக்கிய பொலிசாரும் 2பொதுமக்களும் உயிரிழப்பு.

➡ ஸ்ரீ நகர்லால் பஜார் பகுதியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தேசிய மாநாட்டு கட்சித்தலைவர் குலாம் முகம்மது ஹக்கீம் உரையாற்றிக் கொண்டிருக்கும் போது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 6 படையினர் காயம்.

➡ ரஷ்யாவைச் சேர்ந்த "அன்ரனோவ்-2" என்ற பயணிகள் விமானம் சைபீரியா விலிருந்து புறப்பட்ட வேளை விபத்துக் குள்ளானதில் அதில் பயணம் செய்த 9 பேர் பலி.

➡ கென்யாவிற்கு அருகிலுள்ள டகெஸ்டான் குடியரசின் தலைநகர் மக்காச் கலாவில் நுழைந்த தீவிரவாதிகள் அங்கிருந்த இரண்டு கட்டடங்களில் புகுந்து தாக்குதல் நடத்தினர். இதன்போது பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 5 தீவிரவாதிகள் பலி.

**16.**

➡ பொங்கல் தினத்தையொட்டி தமிழ் நாட்டின் பல பகுதிகளில் இடம் பெற்ற ஜல்லிக் கட்டில் 5 பேர் பலி;பலர் படுகாயம்.


ஜல்லிக்கட்டில்........

➡ ஜம்மு காஷ்மீர் ஸ்ரீநகரில் கடவுச் சீட்டு அலுவலகத்தில் இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையிலான துப்பாக்கிச் சண்டையில் தீவிரவாதியொருவர் பலி.

➡ பிலிப்பைன்ஸ் நாட்டின் மத்திய பகுதியிலுள்ள அக்லான் மாகாணத்தைச் சேர்ந்த காலிஹோ நகரத்தில் இடம் பெற்ற கிறிஸ்தவ மக்களின் திருவிழாவில் பொலிஸ் பாதுகாவலர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரி உட்பட 8பேர் பலி.

➡ மத்திய காஸாப் பகுதியில் இஸ்ரேல் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 3 தீவிரவாதிகள் உட்பட 6 பலஸ்தீனியர்கள் பலி.

➡ கடற்கோள் அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களுக்கு அவுஸ்திரேலியா மற்றும் நியுசிலாந்து நாடுகளில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

➡ தென்கொரியாவில் கடும் புயல் வீசியதால் பசான் துறைமுகத்திலிருந்து சுண்ணாம்புக் கற்களை ஏற்றிச் சென்ற கப்பல் புயலில் சிக்கியதில் கப்பல் இரண்டாக பிளவடைந்ததுடன் அதில் பயணஞ்செய்த 3 ஊழியர்களும் பலி.





➡ ஈராக்கில் குண்டை செயலிழக்கச் செய்வதில் ஈடுபட்டிருந்த 7 உக்ரேனிய வீரர்கள் உட்பட எண்மர் காயமடைந்தனர். இச்சம்பவம் ஈராக்கிய மத்திய வாஸிட் பகுதியில் இடம் பெற்றது.

➡ தென்தாய்லாந்தின் யாலாவிலுள்ள நூடில்ஸ் கடை ஒன்றில் பாரிய குண்டொன்று வெடித்ததில் ஒருவர்பலி, 50 பேர் காயம்.

➡ இந்தோனேஷியாவுக்கு விஜயம் செய்த அமெரிக்கப் பிரதிப்பாதுகாப்புச் செயலர் போல்வூல் போவிற்சை இந்தோனேஷிய சனாதிபதி சுசிலேபாம்பாங் சந்தித்துப் பேசியுள்ளார்.

**17.**

➡ சீன கம்யூனிஸ் கட்சியின் முன்னாள் தலைவர் "சாயோஷியாங்" பீஜிங்கிலுள்ள மருத்துவமனையில் சுகயீனம் காரணமாக மரணம். இவர் 1989 ஆம் ஆண்டு நியன் மென் சதுக்கத்தில் நடைபெற்ற சனநாயக ஆதரவு கோரிய போராட்டத்தை ஆதரித்தவர் எனத் தெரிவித்து கைது செய்யப்பட்ட இவர் அன்று முதல் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.


பிஷப் கடத்தல்

➡ ஈராக்கில் சிரியன் கத்தோலிக்க பிஷப் ஜோஜஸ் கஸ் மோசாஎன்பவர் மொசூல நகரில் வைத்து இனந் தெரியாதவர்களி னால் கடத்தப்பட்டார்.

➡ தாய்லாந்தில் சுரங்கரயில் பாதையில் நின்று கொண்டிருந்த ஒரு ரயில் மீது பின்னால் வந்த மற்றுமொரு ரயில் மோதியதில் 200 பயணிகள் காயம் கணினிக் கோளாறு காரணமாக ரயில் போக்குவரத்தில் குளறுபடி ஏற்பட்டு இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


ரயில் விபத்தில்.....

**18.**

➡ பூஞ்ச் மாவட்டம் மென்தர் செக்டார் பால் நொய் என்ற இடத்தில் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டுப் பகுதியில் ஊடுருவ முயன்ற தீவிரவாதிகளுக்கும் இந்தியப் படையினருக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில் 5தீவிரவாதிகள் பலியாயினர்.



➡ சங்கரராமன் கொலை வழக்கில் கைதான இளைய மடாதிபதி விஜயேந்திரர் காஞ்சிபுரம் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

➡ பலஸ்தீன தீவிரவாதிகளின் தாக்குதல்களை நிறுத்தும் வகையில் மகமூட் அபாஸ் பாதுகாப்புப்படை அதிகாரிகளையும் மற்றும் ஹமாஸ் இராணுவக் குழுவின் தலைவர்களையும்சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன்போது அபாஸ் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதலை நிறுத்துமாறு தீவிரவாதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.


பணயக்கைதிகள்

➡ பாக்தாத்தில் பணிபுரியும் சீனத் தொழிலாளர்கள் 8பேர் தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்.

**19.**

➡ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அவுஸ்திரேலிய தூதரகம், கிழக்கு பாக்தாத் மற்றும் பாக்தாத்தின் பொலிஸ் நிலையமொன்றின் அருகேயும் மற்றும் பாக்தாத்தின் விமானநிலைய நுழைவாயில் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் 12பேர் உடல்சிதறிப்பலி. பலர் படுகாயம்.


அவுஸ்திரேலிய தூதரகம் முன்......

## ரஷ்யாவில் குறுகியகால மருத்துவப் படிப்பை முடித்து சிறிலங்கா திரும்பும் மருத்துவர்களுக்கு அங்கீகாரம்

### -வைத்திய சங்கம் கடும் ஆட்சேபம்

(கொழும்பு)

ரஷ்ய நாட்டில் மருத்துவ பட்டப் படிப்பைக் குறுகிய காலத்தில் முடித்துக் கொண்டு சிறிலங்கா திரும்பிய வைத்தியர்களுக்கு இலங்கை வைத்திய சங்கத்தில் அவர்களைப் பதிவு செய்வதற்கு எடுக்கும் தீர்மானங்களுக்கு எதிராக நாட்டில் உள்ள சகல மருத்துவ்ர்களும் வைத்திய சபையில் தமது பதவிகளிலிருந்து விலகுவதற்குத் தீர்மானங்களை எடுத்துள்ளனர். இதற்கு எதிராக எதிர் வரும் 25ஆம் திகதி மருத்துவர்கள் வேலை நிறுத்தங்களைச் செய்வதற்குத் தீர்மானம் எடுத்துள்ளனர். இது சம்பந்தமாக சிறிலங்கா சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## சுனாமியின் பின் நாட்டைக் கட்டியெழுப்ப ரூ.3000 கோடி நிதியுதவி கிடைத்துள்ளது!

### -பிரதி நிதியமைச்சர் றஞ்சித் சியம்பலப்பிட்டிய தகவல்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நாட்டைக்கட்டியெழுப்புவதற்கு இலங்கைக்கு மூவாயிரம் கோடி ரூபா நிதியுதவிகள் கிடைத்துள்ளதாகப் பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இன்னும் சிலவாரங்களில் மேலதிகவெளிநாட்டுஉதவிகள் கிடைக்கவுள்ளதாகவும் தெரிவித்த அவர், இது தொடர்பாக அந்த நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பிரதி நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிடமிருந்து கிடைக்கப்பெறும் உதவிகள் சிறிலங்கா அரசினால் திட்டமிட்ட வகையில் தமிழர் தாயகப் பிரதேசங்களுக்குபகிர்ந்தளிக்கப்ப டாதுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிராம சேவையாளர்களால் நிவாரணப் பொருட்கள் அபகரிப்பு!

### -விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

அம்பலாங்கொட,வெலிகம, தேவேந்திரமுனை, காலி ,ஹிக்கடுவ.பொத்துவில், கல்முனை ஆகிய எட்டுக்கிராம சேவையாளர் பிரிவில் சுனாமி அலைகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கிய நிவாரணப் பொருள்களை அபகரித்துள்ளது சம்பந்தமாகப் பொதுமக்கள் கொடுத்த புகார்களை அடுத்து மேற்கூறிய பிரிவில் கடமை புரியும் கிராம சேவையாளர்கள் சம்பந்தமாகத் தற்பொழுது விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளது. இது நிரூபிக்கப்பட்டால் இவர்கள் வேலையில் இருந்து நீக்கப்படுவார்கள் என சிறிலங்கா உள்நாட்டமைச்சர் அமர சிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

## சுனாமியில் பாதிப்புற்றோருக்கு நிவாரண அட்டை வழங்கல் சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

சமுர்த்தி முகாமையாளர்களுக்கு சம்பள உயர்வு மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன.சிறிலங்காவில் தற்சமயம் 1035 சமுாத்திவங்கிகள் அமைந்துள்ளன. இவற்றின் பணிகள் யாவும் முழுமையாக கணினிமயப் படுத்தப்படவுள்ளன. இந்த தகவலை வறுமை ஒழிப்பு சமுர்த்தித்திட்ட பிரதி அமைச்சர் ரோகண திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 5 வருடங்களுக்குள் வறிய மக்களுக்கான வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கென ஆரம்பிக்கப்பட்ட திட்டமாக சமுர்த்தி விளங்குகிறது. இந்தக் கருத்தை சர்வதேச நாடுகளும் அங்கீகரித்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புத்தளம் மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சமுர்த்தி முகாமையாளர்களுடனான சந்திப்பின்போது இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார்

இதேவேளை சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண அட்டைகளை வழங்கும் பொறுப்பு சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ரோகண திஸநாயக்க தெரிவித்தார்.

### 3 சிறைச்சாலைகளை இடம்மாற்ற முடிவு

(கொழும்பு)

காலி,மாத்தறை, தங் கல்ல ஆகிய இடங்களில் இயங்கி வந்த மூன்று சிறைச்சாலைகளையும் நாட்டின் மத்திய பகுதிக்கு மாற்ற சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுனாமிபேரலை அனர்த்தங்களினால் மாத்தறை, காலி,தங்கல்ல சிறைச்சாலைகள் முற்றாகப்பாதிப்படைந்துள்ளன. இப்பேரலை அனர்த்தங்களின் பொழுது 300 இற்கு மேற்பட்ட சிறைக்கைதிகள் தப்பிச் சென்றுள்ளனரென அரசாங்கம் அறிவித்துள்ளது.

## 5000தொன் கோதுமை மா இறக்குமதி செய்ய ஏற்பாடு

- அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டே புள்ளே

(கொழும்பு)

கோதுமை மா தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் பெருந்தொகைக் கோதுமை மா இறக்குமதி செய்யப்படவுள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். 5ஆயிரம் தொன் கோதுமை மா நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படவுள்ளது. இதன்மூலம் நாட்டில் ஏற்பட்டுள்ள மா தட்டுப்பாட்டை நிவர்த்திக்க முடியும். அதேநேரம் கோதுமை மா கிலோ ஒன்று 24 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## அடையாள அட்டை வழங்க விரைவில் நடமாடும் சேவை

(கொழும்பு)

சுனாமிப் பேரழிவினால் ஒரு இலட்சத்திற்கு அதிகமானவர்கள் தமது தேசிய அடையாள அட்டைகளை இழந்துள்ளார்கள். இவர்களுக்கு முத்திரைச் செலவுகள் மேலும் ஆள் அடையாள அட்டைப்படங்கள் ஆகியவற்றை அரசாங்கம் இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி முதல் நடமாடும் சேவை காலியில் ஆரம்பமாகும். பின் நாடுமுழுவதும் நடமாடும் சேவைகள் விஸ்தரிக்கப்படும் என அடையாள அட்டைத் திணைக்கள ஆணையாளர் அபேகோன் தெரிவித்துள்ளார்.


## ஆளுகை அலுவலர் பணிநிலைக்கான வேண்டுகை

### ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன

**தகைமைகள் :-**
க.பொ.த.உயர்தரத்தில் சித்தியடைந்திருப்பதுடன், பணிப்பட்டறிவும் இருத்தல் வேண்டும்.

**அகவை :-** 30 தொடக்கம் 55 வரை

**குறிப்பு :-**
வேண்டுகை முடிவு நாள்- 05.02.2005
நேர்காணல் நடைபெறும் நாள்- 07.02.2005
காலை 09.00 மணி

நேர்காணல் நடைபெறும் இடம்-

**மனிதவள மேம்பாட்டுப் பகுதி,**
**நிதித்துறை,**
**நாகதம்பிரான் வீதி,**
**கிளிநொச்சி.**

நேர்காணலுக்கு வருகை தருவோர் தங்கள் தேசிய அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்,வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றுடன் வருகை தருக.

வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:-

பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி. (சி-11091)

ஆளுகை
மனிதவள மேம்பாட்டுப்பகுதி



## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



| கலிங்கராஜ் சுலோசனா | கலிங்கராஜ் யாழினி | கலிங்கராஜ் றோசன் |
|---|---|---|
| பிற-1975-03.31 | பிற-1997.03.02 | பிற-1999.11.02 |
| இற-2004.12.26 | இற-2004.12.26 | இற-2004.12.26 |

25.01.2005 அன்று புதுக்குடியிருப்பு மந்துவிலில் கீழ்க்காணும் முகவரியில் வசிக்கும் அன்னாரின் இல்லத்தில் 31ஆம் நாள் நினைவு அஞ்சலியிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர்களையும் நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

முகவரி:-
சுபாம்பிள்ளை பார்த்தீபன்,
(விஜி,மதி),
8ஆம் வட்டாரம்,
மந்துவில்,புதுக்குடியிருப்பு. (5590)

தகவல்:-
கலிங்கராஜ்
தர்ஷாந்தி
புதுக்குடியிருப்பு.



## 31 ஆம் நாள் நினைவலைகள்



| கிறிஸ்ரி பெர்னாண்டோ | கிறிஸ்ரி பெர்னாண்டோ | கிறிஸ்ரி பெர்னாண்டோ |
|---|---|---|
| மேரி அஞ்சலீனா | ஷெண்பகா | ஜதுர்சாந் |
| 1970.04.06 | 1996.06.24 | 1997.11.04 |

**படைப்பின் பரம்பொருளே இறைவா!**

*உம்முடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல*
*உம்முடைய எண்ணங்கள் நம்முடைய எண்ணங்கள் அல்ல*
*என்பதற்கு ஒப்ப ஒரு கணப்பொழுதிலே உமக்குள்ளே இணைத்துக் கொண்ட*
*அருமைத் தங்கை மருமக்கள் உறவுகள் அனைவரையும்*
*உம்பாதங்களில் அர்ப்பணிக்கின்றோம். இயற்கையின் அனர்த்தம்*
*அணைத்துக் கொண்ட வேளையிலும் நீர் அவர்களை நிரந்தரமாக*
*உம் அணைப்பில் வைத்து நித்தியத்தில் உம்முடன் இளைப்பாற*
*வேண்டுகின்றோம்.*

*''இரக்கம் நிறைந்த இறைவன் இவர்களுக்கு*
*நித்திய இளைப்பாற்றியை அளிப்பாராக''*

இவர்களின் ஆத்ம சாந்திக்காக 24.01.2005 திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
மு.கிறேசியன்
வில்வராசா
உறவினர்கள்.

சென்.மேரிஸ் வீதி,
முள்ளைத்தீவு. (5652)



கல்பாக்கத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களை ராகுல்காந்தி நேரில் பார்வையிட்டு மக்களையும் சந்திக்கிறார்.

# படையினர்–தீவிரவாதிகள் காஷ்மீரில் மோதல்

## 4 தீவிரவாதிகள் பலி

காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கும், இந்தியப் படையினருக்குமிடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் நான்கு தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதோடு மூன்று இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.காஷ்மீர் மாநிலம் உதம்பூர் மாவட்டம் மகோர் என்ற இடத்தில் உள்ள காட்டுப் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் அங்கு விரைந்து சென்றனர்.முதலில் தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதால்,பாதுகாப்புப் படையினர் திருப்பிச் சுட்டனர். இதனால் இருதரப்பினருக்கும் இடையே பல மணி நேரம் கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது.

இந்தச் சண்டையில் 'ஹிஸ்புல் முஜாகிதின் ' என்ற அமைப்பைச் சேர்ந்த 4 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

உதவிக் கொமாண்டர் உட்பட 3 வீரர்கள்இந்தியத் தரப்பில் காயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தக் காட்டுப் பகுதியில் மேலும் 3 தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாகக் கூறப்படுகிறது. அவர்களைத் தேடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை பூஞ்ச் மாவட்டம் பகுதியில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத்தாண்டி காஷ்மீருக்குள் நுழைய லஸ்கர்-இ-தொய்பா இயக்கத்தைச்சேர்ந்த தீவிரவாதிகள் முயன்றனர். அப்போது இந்திய இராணுவ வீரர்கள் அவர்களை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். இதில் 2 தீவிரவாதிகள் பலியானார்கள். இதர தீவிரவாதிகள் தப்பி ஓடிவிட்டனர்.அவர்களிடம் இருந்த ஏ.கே.ரக துப்பாக்கிகள் மற்றும் வெடி மருந்துப் பொருட்களைப் பறிமுதல் செய்தனர்.

# பாக். படையினர் வாலாட்டினால் இந்தியப் படை பதிலடி கொடுக்கும்

## -இந்திய இராணுவத் தலைமைத் தளபதி விஜ்

(புதுடில்லி)

**ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் இரண்டு இடங்களில் பாகிஸ்தான் இராணுவத்தினர் பீரங்கித்தாக்குதல் நடத்தியிருப்பது கவலையளிக்கிறது. இந்தச் சம்பவத்துக்கான காரணங்கள் விரைவில் கண்டறியப்படும். அதற்கு இந்தியத் தரப்பில் என்ன பதில் நடவடிக்கை எடுப்பது என்பது பற்றியும் முடிவு செய்யப்படும் பாகிஸ்தான் படையினர் வாலாட்டினால் இந்தியப்படை பதிலடி கொடுக்கும் என இந்திய இராணுவத் தலைமைத் தளபதி விஜ்கூறியுள்ளார்.**

நாங்கள் அவசரப்படாமல் நிலைமையைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறோம் கடந்த செவ்வாய்க் கிழமையும், புதன்கிழமையும் நடந்த பீரங்கித்தாக்குதல்கள் இந்திய இராணுவத்திற்கு அதிர்ச்சியைத் தந்துள்ளது. இந்தத் தாக்குதல்கள் தீவிரவாதிகள் நடத்தியதா? என்பது பற்றியும் விசாரணை நடந்து கொண்டு இருக்கிறது. எதுவாக இருந்தாலும் இந்தியப்படைகள் அதை எதிர்கொள்ளத்தக்க அளவுக்கு எச்சரிக்கையாகவும், தயார் நிலையிலும் உள்ளனர். பாகிஸ்தான் வாலாட்டினால் பதிலடி கொடுப்போம் என்று தலைமைத் தளபதி விஜ் உறுதிபடக் கூறினார்.

நாம் இந்தியப்படையின் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் சிறிதும் குறைத்துக் கொள்ளவில்லை. தேவையான அளவிற்குப் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செய்திருக்கிறோம். பூஞ்ச் பகுதியில் கடந்த ஐந்தாம் திகதி 5பேர் கொல்லப்பட்டது பற்றி தளபதி விஜ் கூறுகையில், தீவிரவாதத்தின் மூலம் யாரும் வெற்றி பெறமுடியாது.

எல்லை தாண்டிய தீவிரவாதத்தில் ஈடுபடமுயலும் போது அவர்கள் ஒவ்வொரு முறையும் தோல்வியைத்தான் சந்திக்கிறார்கள் என்று கூறினார். மத்திய இராணுவ அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் கவனத்திற்கும் இந்தப்பிரச்சினை எடுத்துச் சொல்லப்பட்டது. இந்தச் சம்பவம் குறித்து அவர் கருத்துத் தெரிவித்த போது இரு தீவிரவாதிகளின் விசமத்தனமாக இருக்கலாம் என்று கூறினார். இந்தியா-பாகிஸ்தான் படைகளுக்கிடையே கருத்து வேறுபாடு இருக்கிறது என்பதையும் பிரணாப்முகர்ஜி ஒப்புக் கொண்டார். இந்த நிலையில் ஜம்முப் பகுதிக்கு இந்திய இராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் என்.சி.விஜ் நேற்று முன்தினம் சென்றார். இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். பாகிஸ்தான் படையினர் நடத்திவரும் பீரங்கித்தாக்குதல் பற்றி கருத்துக் கேட்டறிந்தார்.

# ஜெயலலிதா மீது புதிய வழக்கு மத்திய புலனாய்வுத்துறை தயார்

முதலமைச்சர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை தொடங்கவுள்ள நிலையில் அவர் மீது புதிய வழக்கைத் தொடர மத்திய புலனாய்வுத்துறை தயாராக இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சொத்துக்குவிப்புத் தொடர்பான ஜெயலலிதாவின் மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன இருக்கை இந்தத் தீர்ப்பை வழங்கியது. அந்தத் தீர்ப்பின் அதிர்ச்சியிலிருந்து மீளாத நிலையில் ஜெயலலிதாவுக்கு எதிரான இன்னொரு புதிய வழக்குத் தொடரப்படவுள்ளது ஜெயலலிதா தரப்பை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.


இன்று குதூகல திறப்பு விழா

மீண்டெழும் வனப்புறு நகரில் வாடிக்கையாளர் தேவை அறிந்து புதிய ஆண்டில் ஓர் புதிய உதயம்

அம்மன் கட்டடப் பொருள் வாணிபம்

யாழ்சாலை, தொ. பே: 021-2285852, 021-2285077 கிளிநொச்சி.

* தரமும் உறுதியும் மிக்க கூரைத்தகடுகள்.
* உறுதியான கட்டட ஆக்கத்திற்கான சிமெந்து வகைகள்.
* இறுதிவரை பலம் தரும் உறுதியான இரும்பு வகைகள்.
* வணப்பூட்டும் வர்ணப் பூச்சுக்கள்.
* தேவைக்கேற்ற கட்டட உதிரிப்பாகங்கள்.

அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

அம்மன் வாணிபத்தினரின் மற்றொரு சிறப்பு நகர்வு

உலகப் புகழ்வாய்ந்த "ஏசியா" ஈருருளிகளை உங்களுக்காக இறக்குமதி செய்து வழங்குகின்றனர்.

ஏசியா ஈருருளிகள் உன்னத பயணத்திற்கும் உறுதியான பயன்பாட்டுக்கும் உகந்தவை.

ISI தரச்சான்றிதழ் பெற்றவை

ஏசியாவின் ஏழு கேள்விகள் சிறப்புப் பரிசுத்திட்டம்

ஏசியா சைக்கிள் ஒன்றைத் கொள்வனவு செய்து சிறப்புப் பரிசை பெறும் தெரிவாளராகுங்கள்.
பரிசுக்கான விதிமுறைகள்:-

ஈருருளி கொள்வனவு செய்யும் போது வழங்கப்படும் "ஏசியாவின்" ஏழு கேள்விகள் அட்டைக்குரிய விடைகளை எழுதி உங்கள் முகாமையாளரிடம் கையளியுங்கள்!

ஒவ்வொரு 10 ஈருருளிகள் விற்பனை செய்யப்பட்டதும் அட்டைகள் குலுக்கலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
ஏழு கேள்விகளுக்கும் சரியான விடையெழுதப்பட்ட அட்டைகள் குலுக்கலில் சேர்க்கப்படும்.
குலுக்கலில் தெரிசெய்யப்படுபவருக்கு ரூபா 1500/= பெறுமதியான காசோலை வழங்கப்படும்.
இக்காசோலையை அம்மன் நிறுவனத்தினரால் குறிக்கப்படும் ஈருருளி உதிரிகள் வாணிபத்தில் கொடுத்து தேவையான ஈருருளி உதிரிகளை பெற்றுக்கொள்ளலாம்.
அம்மன் வாணிப நிறுவன பணியாளர்களோ அல்லது அவரது குடுபத்தினரோ இச்சிறப்புப் பரிசுத்திட்டத்தில் பங்குபற்றமுடியாது.





(சி-11144)

### வி.பி.முக்கோண ஒரு நாள் போட்டி

# மைக்கல் கிளார்க் அபார துடுப்பாட்டம்


# அவுஸ்திரேலிய அணிக்கு இலகு வெற்றி




வி.பி.கிண்ணத்துக்கான முக்கோண ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது லீக் போட்டியிலும் அவுஸ்திரேலியா பாகிஸ்தானை 9 விக்கெட்டுக்களால் இலகுவாக வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

நேற்று நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தான் அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அவுஸ்திரேலிய பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்ததுடன் 39.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது.



துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் இன்சமாம் உல்-ஹக் 50 ஓட்டங்களையும், அப்ரிடி 48 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.



பந்து வீச்சில் மெக்ராத், பிரட்லீ தலா இரண்டு விக்கெட்டுகளையும், லீமன் மூன்று விக்கெட்டுகளையும், வட்சன், கஸ்பரோவிச் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு இலகுவான வெற்றி இலக்கு நோக்கி துடுப்பாட்டத்தை ஆரம்பித்த அவுஸ்திரேலியா 27.4 ஓவரில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 128 ஓட்டங்களைபெற்றிருந்த போது காலநிலை சீரின்மையால் போட்டிநிறுத்தப்பட்டது.

அப்போது கிளார்க் 78 ஓட்டங்களையும், பொண்டிங் 9 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காது இருந்தனர். தொடர்ந்து போட்டி நடைபெற்றபோது துடுப்பெடுத்தாடிய கிளார்க் அபாரமாக ஆடி சதம் அடித்தார். அவர் ஆட்டமிழக்காது 103 ஓட்டங்களையும், பொண்டிங் ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களையும் பெற 36.2 ஓவரில் அவுஸ்திரேலியா வெற்றி இலக்கை அடைந்தது.

ஆட்டநாயகனாக கிளார்க் தெரிவானார்.

இவ் வெற்றி மூலம் இப்போட்டித் தொடரில் நான்கு போட்டிகளில் மூன்றில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. ஒரு போட்டி காலநிலை சீரின்மையால் கைவிடப்பட்டது.



சுனாமி நிவாரண நிதிக்காக கங்குலி தலைமையிலான ஒரு அணியும், இந்தி நடிகர் மிதுன் சக்கரவர்த்தி தலைமையில் ஒரு அணியும் மோதிய காட்சி கால்பந்து போட்டி கொல்கத்தாவில் நடந்தது. இதில் கங்குலி விளையாடும் காட்சி. கங்குலி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டி மூலம் ரூபா 12 லட்சம் நிதி திரண்டது.

## சுனாமி நல நிதிக் கிரிக்கெட் நியூசிலாந்து அள்ளி வழங்கியது

சுனாமி நிவாரண நிதிக்கான கிரிக்கெட் போட்டிக்கு பெருமளவான நிதியை அள்ளி வழங்கியுள்ளது நியூசிலாந்து அரசு. நியூசிலாந்து-உலக 11 பேர் அணிகளுக்கு எதிரான ஒருநாள் தொடரில் அடிக்கப்படும் ஒவ்வொரு ஓட்டங்களுக்கும் ரூ.630, ஒவ்வொரு பவுண்டரிக்கும் ரூ. 31 ஆயிரம், ஒவ்வொரு சிக்சருக்கும் ரூ. ஒரு லட்சத்து 50 ஆயிரம் என பரிசு அறிவித்தது நியூசிலாந்து அரசு. இந்த வகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் தலைவர் ஸ்டீபன் பிளெமிங் மட்டுமே சுமாராக 16 இலட்சம் இந்திய ரூபாய் திரட்டி நிவாரண நிதியாக வழங்கினார். மூன்று போட்டிகளும் முடிந்ததும் நிவாரணநிதி மொத்தமாக கணக்கிட்டு இலங்கை கிரிக்கெட் சபை மற்றும் வேர்ல்ட் விஷன் அமைப்புகளிடம் வழங்கப்படும்.

## இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி 3ஆம் நாள் ஆட்டமும் மழையால் பாதிப்பு

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையில் நடைபெற்றுவரும் ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி யின் மூன்றாம் நாளான நேற்று மழை காரணமாக போட்டி நிறுத்தப்படும்போது இங்கிலாந்து அணி தனது முதல் இனிங்சிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து114 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பொலக் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

முதல் இனிங்சில் தென்னாபிரிக்கா அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

## பாகிஸ்தானுக்கு எதிராக சிறப்பாக ஆடுவேன் —சேவாக்

"பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை எதிர்நோக்கி காத்திருக்கிறேன். அந்த அணி பந்து வீச்சாளர்களின் ஆட்டத்தை உன்னிப்பாக கவனித்து வருகிறேன். பாகிஸ்தானுக்கு எதிராக சிறப்பாக ஆடி ஓட்டங்களை குவிக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளேன். தொடக்க ஆட்டக்காரராக என்னுடன் யார் ஆடினாலும் எனக்கு பிரச்சினை இல்லை" என்று தெரிவித்துள்ளார் இந்திய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சேவாக்.


## அவுஸ். பெண் மீதான பாலியல் பலாத்காரம் அக்தர் மீது சந்தேகம்



அவுஸ்திரேலிய பெண் மீதான பாலியல் புகாரில் சொகைப் அக்தர் பெயர் அடிபடுகிறது. பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியா சென்றுள்ளது. மெல்பேர்ன் ஓட்டலில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ஒருவர் அவுஸ்திரேலிய இளம் பெண்ணை வல்லுறவுக்குட்படுத்தியதாக அங்குள்ள நாளிதழ்கள் செய்தி வெளியிட்டன. இரவு விடுதிகளில் சொகைப் அக்தர் சுற்றும் படங்களும் வெளியாகின. இந்த நேரத்தில் அக்தர் பாகிஸ்தானுக்குத் திரும்ப அழைக்கப்பட்டதால் சம்பந்தப்பட்ட வீரர் அக்தராக இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் ஷாரியார்கான் அளித்த பேட்டியில் "இரவு விடுதிக்கு செல்லவே இல்லை என அக்தர் மறுத்துள்ளார். அவரை மீண்டும் விசாரிக்க உள்ளோம் என்றார்.

## அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி

# அந்ரே அகாசி போராடிவெற்றி பெற்றார்



மெல்பேர்னில் நடைபெறும் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டித்தொடரில் அமெரிக்க வீரர் அந்ரே அகாசி மிகக் கடுமையாகப்போராடி சுவீடனின் ஜோக்சிம் ஜோன்சனை 6-7,(4-7),7-6,(7-5),7-6(7-3),6-4 என்ற கணக்கில் வெற்றிபெற்றுள்ளார்.


51 தாக்குதல் அடிகளையும் 96 வெற்றி அடிகளை அடித்த போதிலும் ஜோன்சன் தோல்வியையே தழுவினார். கால் இறுதிப் போட்டியில் ரோஜர் பெடரருடன் ஆடும் கனவோடு இப்போட்டியை ஆரம்பித்த அகாசி ஆரம்பத்தில் ஜோன்சனின் தாக்குதலால் நம்பிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டது. ஆயினும் இறுதிவரை கடுமையாகப் போரிட்டு அவர் வெற்றி பெற்றார். போட்டிகடுமையாகவும் அதேநேரம் அதிர்ச்சியைத் தந்ததாகவும் அவர் இப்போட்டி பற்றி குறிப்பிட்டுள்ளார்.



இப்போட்டித்தொடரில் பெண்களுக்கான போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் நதியா பெட்ரொவாவை 6-2,6-4 என்றசெட்டில் வென்று காலிறுதிக்கு தகுதிபெற்றுள்ளார். இவர் மோரிஸ் மோவை காலிறுதியில் சந்திப்பார்.

பிரான்சிய பெண்ணான நதியாபெட்ரோவா காலில் ஏற்பட்ட காயத்துடன் போட்டியில் பங்கு பற்றினார். இந்தக் காயம் போட்டிகளில் இருந்து விலத்தும் அளவுக்கு இருக்கவில்லை என அவர் கூறுகிறார். தோல்வி பற்றி தாம் அலட்டிக்கொள்ளப் போவதில்லை என்றும் வீழ்ச்சிகள் போட்டிகளில் தடுக்க முடியாது என்றும் தெரிவிக்கிறார்.

## கவர்ச்சியில் செரீனாவை வென்றார் சானியா மிர்சா



செரீனா வில்லியம்ஸிடம் ஆட்டத்தில் வேண்டுமானால் தோற்றிருக்கலாம். ஆனால் கவர்ச்சியில் அவரை வென்றுள்ளார் இந்திய இளம் புயல் சானியா மிர்சா.

ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவாவுக்கு அடுத்து, அதிக ரசிகர்களைக் கவர்ந்தவராகியுள்ளார் 18 வயது சானியா மிர்சா. பேச்சுக்காக இது சொல்லப்படவில்லை. இணையத்தளத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் இச்சிறப்பு வெளியாகியுள்ளது.

அவுஸ்திரேலிய ஓபன் இணையத்தளத்தை இதுவரை 10 இலட்சத்து ஓராயிரம் பேர் பார்த்துள்ளனர். அதில் ஷரபோவாவுக்கு அடுத்து ரசிகர்கள் அதிகம் பார்த்துள்ளது சானியாவின் பக்கத்தைத்தான்!.

செரீனா வில்லியம்ஸ், ஸ்லோவாக்கிய வீராங்கனை டேனியலா ஹன்டுசோவா, நெதர்லாந்து வீராங்கனை மிச்செல்லா கிராஜிசெக் ஆகியோர் சானியாவுக்கு அடுத்த இடத்தில் உள்ளனர். 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த அவுஸ். ஓபன் போட்டியில் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியதன் மூலம் பலரது நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டுள்ளார் ஹைதராபாத் இளவரசி சானியா. ஆடவர் பிரிவில் சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெரடர் முதலிடத்தைப்பிடித்துள்ளார். அவருக்கு அடுத்து அகாஸி, அன்ரு ரொடிக், லெவிடன் ஹெவிட், மராட் சுபின் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.



## விளையாட்டு

## சிம்பாப்வேயின் சர்ச்சைக்குரிய வீரர்கள் மீண்டும் அணியில் இணைய விருப்பம்




சர்ச்சைக்குரிய முன்னாள் சிம்பாப்வே கிரிக்கெட் வீரர்கள் ஏழு பேர் ஹராரேயில் கிரிக்கெட் அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தியிருப்பதாக அந்நாட்டு 'டெய்லி டெலிகிராப்' என்ற பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.


ஹீத்ஸ்ரிக் உட்பட சிலர் உள்ளூர் போட்டிகளில் பங்கேற்க தீர்மானித்திருப்பதுடன் தேசிய அணியில் இணையும் முயற்சியிலும் தொடர்ந்து அக்கறை காட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பேச்சுக்களில் கலந்து கொண்டோர் ஹீத் ஸ்ரிக், ஸ்வெர்ட் காலைல், ரவர் கிறிப்பர் கிறேக்விஷார்ட், றே பிரைஸ், அன்டி பிளிக்னட் நில் பெரைரா ஆகியோர்.

ஹித் ஸ்ரீக் உட்பட பல வெள்ளையின வீரர்கள் அணியிலிருந்து நீக்கியதும், டெடன்டா தைபு அணியை இளம் வீரர்களுடன் வழி நடத்துகின்றார். அத்துடன் இடையில் அவ்வணியின் டெஸ்ட் அந்தஸ்த்தும் பறிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



அமெரிக்காவின் மியாமியில் நடைபெறும் உலகக் கிண்ண குத்துச் சண்டைப் போட்டியின் ஆரம்பச்சுற்றில் பங்கேற்கும் புளோயட் மேவெத ஜூனியரும், கென்றி புருசல்சும் (போட்டியில் மேவெதர்ஜூனியர் வெற்றிபெற்றார்.)



**சிந்தனைக்கு**

இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதி பூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 24-01-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23ela @ yahoo .com


## சிங்களவரிடையே இல்லை..!

"சிறிலங்காவை மீளக் கட்டி எழுப்பக்கூடிய தலைமையை தற்போதைய அரசிடம் இருந்து எதிர்பார்க்க வேண்டாம" என்று ஜே.வி.பி யின் அமைச்சர்களில் ஒருவரான லால்காந்த எச்சரித்துள்ளார். லால்காந்தவின் இவ் எச்சரிக்கை ஆரம்பம் முதலே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனான முரண்பாட்டின் காரணத்தினாலோ,அன்றி சுனாமி அனர்த்தத்தின் பின்னரானா அரசியலின் அடிப்படையிலானதாகவோ இருத்தல் கூடும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பின்னர் சிறிலங்காவிற்கெனப் பாரிய அளவில் நிவாரணப் பொருட்கள் மற்றும் நிதி உதவிகள் உலகின் பல பகுதிகளிலும் இருந்து கிடைக்கப் பெற்றன என்பது வெளிப்படையானது. இதில் நிதியுதவிகளில் குறிப்பிடத்தக்க உதவி இதுவரையில் கைக்கு எட்டி இருப்பினும், நிவாரணப் பொருட்கள் பெருமளவில் கைக்குக்கிட்டிவிட்டன என்றே கூறலாம்.

ஆனால் இந்நிவாரணப் பொருட்களில் பெரும்பாலனவை தெற்கிற்கே பகிர்ந்தளிக்கப்பட்ட போதும், அவை பாதிக்கப்பட்ட மக்களைப் பெரியளவில் சென்றுசேரவில்லை என்றே தெரிவிக்கப்படுகின்றது. ஆகையால் இந்நிவாரணப் பொருட்கள் அரசாங்கத்திலோ அன்றி அதிகாரிகளினாலோ அன்றி கிராம உத்தியோகத்தினராலோ பாதிக்கப்பட்டோரிடம் சென்றடையாமல் மோசடி செய்யப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

அதாவது சிறிலங்கா அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் இருந்து அடிமட்டம் வரையில் ஊழல் நிரம்பவே உள்ளது. ஆகையினால் இந்நிவாரண விநியோகம் என்பது சீரான முறையில் உரியவர்களுக்குச் சென்றடையாது என்பது அதிர்ச்சிக்குரியதல்ல. அவை பெரும்பாலும் அரசியல்வாதிகளினதும் அதிகாரிகளினதும் வீட்டிற்கும் அவர்களின் உற்றார் உறவினர்களுக்குமே பகிர்ந்தளிக்கப்பட்டதாக இருக்கும்.

இந்நிலையில் இவ்அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் எவ்வாறு மக்கள் நம்பமுடியும்? அதிலும் பெருமளவு நிதி புழங்கும் விடயத்தில் அதிகாரிகள் நேர்மையாகவும், நடுநிலைமையுடனும் செயற படுவார்கள் என எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்.

ஆகையினல் ஜே.வி.பி யின் அமைச்சர் லால்காந்த கூறியிருப்பது என்பது தவறாகக்கொள்ளத்தக்கதல்ல. அதாவது நிவாரணப் பொருட்கள் விநியோகத்தையே சீராகச் செய்யமுடியாத அரசாங்கத்தினால் நாட்டை மீளக்கட்டி எழுப்பும் பணியை எவ்வாறு செய்ய முடியும்? என்பதே ஆகும்.

அமைச்சர் லால்காந்தவின் இக்கூற்றுச் சரியே ஆயினும் இப்பெரும் மீள்கட்டுமானப் பணிகளை யார் பொறுப்பில் விடுவது? என்பது முக்கியமானதாகும். இதற்குப் பொருத்தப்பாடானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். ஜே.வி.பி. இப் பொறுப்பு தம்மிடம் கொடுக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் இக்குற்றச்சட்டை சுமத்தி இருக்கக்கூடும் அது எந்த வகையில் பொருத்தப்பாடானதாகும்.

ஏனெனில் ஜே.வி.பி யும் நடுநிலைமையானதும், நீதியானதுமானதொரு கட்சி எனக் கொள்ள முடியாது. அரசாங்கத்தின் நிவாரணப்பணி நடவடிக்கைகளில் தென்னிலங்கையில் சீர் கேடு நடந்தமைக்கு ஜே.வி.பியின் நடவடிக்கைகளும் காரணம் எனச் சுட்டிக் காட்டப்படுவதுண்டு.

எடுத்துக்காட்டாக சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவிகளை மேற்கொள்வதற்கு முன்னதாக ஜே.வி.பி தனது கட்சியின பரச்சாரச் செயற்பாட்டிலேயே ஈடுபாடுகாட்டியது அதாவது ஜே.வி.பித் தொண்டர்கள் மேற்கொண்ட நிவாரணப்பணிகளைவிட அவர்களின் கட்சிப்பதாகைகளும் அவர்களின் கட்சியை விளம்பரப்படுத்தும் செயற்பாடுகளுமே பெரிதும் காணப்பட்டன.

இதற்கும் மேலாக அரசினதும் அரசசார்பற்ற நிறுவனங்களினதும் தனியாரதும் நிவாரணப் பொருட்களையும் அபகரித்த ஜே.வி.பி யினர் அவற்றைத் தமது பொருட்களை போன்று தமது கட்சி ஆதரவாளர்களுக்கே விநியோகித்தனர். இது தொடர்பான குற்றச்சாட்டு ஆளும் கட்சியில் பிரதான அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினாலேயே முன்வைக்கப்பட்டதுண்டு.

அதாவது ஆளும் கூட்டணிக்குள் இருந்து கொண்டு அரசாங்கம் என பிரதான ஆளும் கட்சியை விமர்சிப்பதினால் மட்டும் ஜே.வி.பியினர் நேர்மையானவர்கள்என்றோ,ஆற்றல் மிக்கவர்கள் என்றோ ஆகிவிடமாட்டாது. சுனாமி அனர்த்தத்தினால் மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பில் இருந்து மக்களை மீட்டெடுத்துவிடுவர் என எதிர்பார்க்க முடியாது.

இந்நிலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறிலங்காவைக் கட்டியெழுப்ப ஆட்சியிலுள்ள தலைமையினாலோ அன்றி ஆளும் தரப்பில் உள்ள கூட்டணியினராலோ சாத்தியமாகி விடமாட்டாது. ஏனெனில் இக்கூட்டணியில் உள்ள இரண்டு பிரதான தரப்புமே நீதியான பார்வையும் நடுநிலையான செயற்பாடும் கொண்டவையல்ல. சுனாமியால் பாதிக்கப்பட்ட நாட்டைக் கட்டியெழுப்புவதென்பது நீதியானதும்; நேர்மையானதுமான பண்புடனும் செயற்றிறனும்அர்ப்பணிப்பும் மிக்கதானதுமான தலைமை தேவை. இது சிங்களவர் மத்தியில் இன்று உண்டா? என்பது கேள்விக் குரியதே.

# சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தோரின் ஆத்மா சாந்திக் கிரியைகள் இன்று

(வடமராட்சி)

சுனாமி அழிப்பேரலையால் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்திக்கான கிரியைகள் நிகழ்த்துவதற்கு அனைத்துலக சைவகுருமார் ஒன்றியம் முன் வந்துள்ளது.

ஆழிப் பேரலையால் உயிரிழந்தவர்களுக்கான ஆத்மா சாந்திக் கிரியைகள் இன்று வியாபாரிமூலை எரிஞ்சம்மன் கோவிலில் அந்தியேட்டி மடத்தில் நடை பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் (இராணுவக்கட்டுப்பாடு) உயிரிழந்தோர் 112 ( நூற்றிபன்னிரண்டு) பேர், இவர்களின் உறவினர்கள் ஆத்மா சாந்திக் கிரியைகளைக் கட்டணமின்றி நிகழ்த்த முடியும் என அனைத்துலக சைவகுருமார் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இன்று சுனாமி ஆழிப் பேரலையால் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் ஆத்மா சாந்திக் கிரியைகளுக்காக முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் கோவிலுக்கும் செல்லவிருப்பதால் அதற்கான போக்குவரத்து ஒழங்கமைப்பினை வடமராட்சி அரசியல்துறையினர் மேற்கொண்டுள்ளனர். (கா)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச நிவாரணம் இன்னும் கிட்டவில்லை

## திருமலை மாவட்ட நிலை குறித்து எழிலன்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வெருகல் பிரதேச மக்களுக்கு வெள்ளம் ஏற்பட்டு மூன்று மாதங்களாகியும் அரசினால வெள்ள நிவாரணம் வழங்கப்படவில்லை. சுனாமியினால் பாதிக்கப்பட்டு ஒரு மாதமாகியும் இம்மக்களுக்கு இன்னும் சுனாமி நிவாரணம் வழங்கப்படவில்லை. இவ்வாறு விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் இத்தகவலை தெரிவித்தா திருமலை மாவட்டத்தின் சுனாமி அனர்த்தம் தொடர்பான கலந்துரை யாடலில் பங்குபற்றி பேசும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வீதிகள் ஏராளம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளன. சீனன்வெளி, உப்பூறல் ஆகிய தமிழ்க் கிராமங்கள். இவை சேருவில சிங்கள பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ளன. இக்கிராமங்களில் வாழும் மக்களுக்கு இன்னும் சுனாமி நிவாரணமே வழங்கப்படவில்லை. உலக உணவுத் திட்டத்தின் கீழ். வழங்கப்படும் நிவாரணம் கூட அவர்களுக்கு வழங்கப்பட வில்லை. சீனன்வெளி, உப்பூறல் கிராம மக்கள சுமார் பதினைந்து கிலோ மீற்றர் தூரம் தோப்பூருக்கு நடந்து சென்று கூட்டுறவுச் சங்கக் கடையில் தங்களுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வாங்க வேண்டியுள்ளது என்றும் எழிலன் குறிப்பிட்டார். (25)

சுனாமி கடல் அலைத்தாக்கத்தால்

# இலங்கையில் 15 பிரதேசங்களில் கடல் முன்னோக்கி 30 மீற்றர் நகர்வு

சுனாமி கடலலைத்தாக்கத்தினால் இலங்கையின் 15 பிரதேசங்களில் கடல் 30 மீற்றர் தூரத்துக்கு முன்னோக்கி வந்துள்ளதாக புவியியல் பீட சிரேஷ்ட போதனாசிரியர் டி.ஆர். சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

சுனாமி பேரலைகள் 800 கீலோ மீற்றர் வேகத்தில் வந்து தாக்கியுள்ளன. இதனால் காலி, திக்வெல, அம்பாந்தோட்டை, தங்கால, யால பாலம், முல்லைத்தீவு, திருகோணமலை,பொத்துவில் உட்பட 15 பிரதேசங்களில் 30மீற்றர் தூரம் கடல் முன்னோக்கி வந்துள்ளது.

இது பழையநிலைக்கு வர ஆறுவருடங்களாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நிவாரணப்பணியில் ஈடுபட்டிருந்த வேளை

# அவுஸ்பிரஜையை தாக்கிய மூவர் பேருவளைப்பகுதியில் கைது

பேருவளைப் பகுதியில் அவுஸ்திரேலிய பிரஜை ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டின் அடிப்படையில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் இடம்பெற்றவேளை குறிப்பிட்ட அவுஸ்திரேலிய பிரஜை நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்தார் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடத்தியோரை அடுத்த மாதம் 02ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு களுத்துறை நீதவான் உத்தரவிட்டுள்ளாா.

# சுனாமியால் இறந்தோரின் சொத்துடமைகளை ஒருவருடகாலம் உரிமைகோரத் தடை

## சிறில.நீதி அமைச்சு அறிவிப்பு

சுனாமி பேரழிவினால் இறந்தவர்களின் சொத்துடமைகளுக்கு ஒரு வருடம் வரை உரிமை கோர முடியாதெனவும் மற்றும் அந்த உடமைகளை பாவனைக்கு எடுக்க முடியாதெனவும் நீதி அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இறந்தவர்களுக்கு மரண சான்றிதழ்கள், தற்போது ஆதரவற்ற நிலையில் உள்ள குழந்தைகளை உரியவர்களிடத்தில் ஒப்படைப்பது சம்பந்தமாக சுனாமி பாதிப்பு என்ற சட்டம் ஒன்றினை அமுல்படுத்த தற்போது நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக நீதி அமைச்சர் மீண்டும் தெரிவித்துள்ளார்.

—சுனாமி அனர்த்தத்தில் இறந்த—

# மேலும் ஐவரின் சடலங்கள் முல்லையில் கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவுப் பகுதியில் கடந்த மாதம் ஏற்பட்ட கடல் அனர்த்தத்தால் இறந்தவர்களின் சடலங்கள் மேலும் ஐந்து கண்டு பிடிக்கப்பட்டு அவ்விடத்திலேயே தகனம் செய்யப்பட்டுள்ளன.

இச்சடலங்களில் இரண்டு நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டவையாகும் ஏனைய மூன்று சடலங்களும் நேற்றுக் காலையில் கண்டெடுக்கப் பட்டு அவ்விடத்திலேயே தகனம் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி சடலங்கள் ஐந்தும் இனம் காணமுடியாத அளவிற்கு உருக்குலைந்த நிலையில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. தொடர்ந்து மீட்புப்பணியிலும்,புனரமைப்பு பணியிலும் ஈடுபட்டு வருகின்ற வேளையிலேயே இச்சடலங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. (கு,ச)

# அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் இன்று இலங்கைக்கு விஜயம்

அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று இலங்கை வரவுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவுஸ்திரேலிய உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகள் குறித்து நேரில் ஆராய்வதற்காக வருகை தருகிறார். இவர் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு செல்லவுள்ளதுடன் பிரதமர் மகிந்தராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

# வடகிழக்கு புனரமைப்பிற்கு

# நோர்வே நாடு உதவ வேண்டும்

## தமிழ்க் கூட்டமைப்பினர் கோரிக்கை

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் நேற்று நோர்வே தூதரகத்தில் நோர்வே நாட்டின் கன்சவேட்டில் கட்சி உட்பட்ட மூன்று கட்சிகளின் பாராளுமன்ற பிரதிநிதிகளை சந்தித்தனர். இதன் போது சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கின் பகுதிகளை புனரமைக்க நோர்வே நாடு உதவ வேண்டும். இலங்கையின் கடற்பரப்பின் மூன்றில் இரண்டு கடல் பகுதி வடக்கு கிழக்கில் உள்ளது அதேபோல சுனாமி பாதிப்பிலும் மூன்றில் இரண்டு பங்கிற்கு அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டது வடக்கு கிழக்கு பகுதிகளில் தான். எனவே வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதியுதவிகளில் மூன்றில் இரண்டு பங்கு வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு கிடைக்க வேண்டும். இதனைத் தவிர சமாதான முயற்சிகளை நோர்வே நாடு தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார். இந்த விடயத்தை தாம் பரிசீலிப்பதாக நோர்வே குழுவினர் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

அத்துடன் அதற்கு உரிய கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்த வேண்டும். அரசு மூலம் அல்லாது நேரடியாக உதவிகளை வழங்குவதற்கு நோர்வே அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். உலக நாடுகளை அவர்கள் வலியுறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, இச்சந்திப்புக் குறித்து கருத்துத் தெரிவித்த நோர்வே பாராளுமன்ற உறுப்பினர், நாங்கள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்ததன் மூலம் சுனாமி பாதிப்பிற்குள்ளான தமிழ்ப் பிரதேசங்களின் நிலைமை குறித்து தகவல்களைப் பெற்றுக்கொண்டோம். நிதி உதவி வழங்கும் நாடுகளால் வழங்கப்பட்ட நிதி தமிழ்ப் பிரதேசங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை என்பதை அறிந்து கொண்டோம். இது குறித்து நாம் கவனம் செலுத்துகின்றோம். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நோர்வேயும் ஏனைய நிதி உதவி வழங்கும் நாடுகளும் உரிய வகையில் நிதி உதவியும், புனரமைப்பு நிவாரணப் பணிகளும் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் இந்தத் தகவலை நாங்கள் அனைவருக்கும் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.



முல்லைத்தீவுப் பகுதியில் "சுனாமி" கடல் அனர்த்தத்தினால் பலியானவர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு பிரதான வீதிக்கு அருகே உள்ள இடத்தில் நேற்று மாலை தமது உறவுகளுக்காக அடக்கம் செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் மெழுகுவர்த்தி கொழுத்தி அஞ்சலி செலுத்தினர். இவ்வாறு அஞ்சலி செலுத்தும் சிறுவர்களை படத்தில் காணலாம். (படம்:செல்வா)

### மீளவும்...

வைத்தனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக தலைமைச் செயலகத்தில் கடந்த 22ஆம் திகதியன்று விஜயம் மேற்கொண்ட வேளை மேற்படி திட்டம் நோர்வே உயர்மட்டக் குழுவினரால் ஆரம்பித்து வைக்கப்பெற்றது.

இத்திட்டத்திற்கான நிதியுதவியினை நோர்வே,மலேசிய நாட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கவுள்ளதுடன் இததிட்டத்தினை முல்லைத்தீவு எம்.எம்.எஸ். நிறுவனம் நடைமுறைப்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

# சித்திரை மாத கடற் கொந்தளிப்பிற்கு முன் யாழ்.கரையோர பாதுகாப்பைப் பலப்படுத்துக

*–சுற்றாடல் அதிகார சபையிடம் கடற்றொழிலாளர் கோரல்*

வருடத்தின் சித்திரை மாதப் பகுதிகளில் வழமையாக ஏற்படும் கடற்கொந்தளிப்பிற்கு முன்னதாக யாழ். மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டுமென பல கடற்றொழிலாளர் அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

நேற்று முன்தினம் வடமராட்சியின் வதிரிப் பகுதியில் இயங்கி வரும் சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான புனர்வாழ்வு செயலணிக்குழுவின் அலுவலகத்திற்கு விஜயம் செய்த மத்திய சுற்றாடல் அதிகார சபை பிரதிநிதிகளிடமே இக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் டி.கொஸ்ரா தலைமையில் வருகை தந்திருந்த இப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் கடற்புலிகளது முக்கியஸ்தர்களையும், கடற்றொழிலாளர்கள் சங்கப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தினர். விசேட செயலணியின் இணைப்பாளர் ஏ.பாலையா தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன் மற்றும் அரசியல் விவகார பொறுப்பாளர் அருணன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு கலந்து கொண்டிருந்த கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளே வருடத்தின் சித்திரை மாதப் பகுதிகளில் ஏற்படும் கடற் கொந்தளிப்பின் முன்னதான கரையோரப் பகுதிகளின் பாதுகாப்பை பலப்ப டுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர். (27)

### ஐ.தே.க...

அரசியலுக்காக பயன்படுத்தக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.அரசாங்கத்தின் நிவாரணப் பணிகளில் சில இடங்களில் குறைபாடுகள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(32)

### மேலும்...

இவ்வாறு யாழ். வரவுள்ள அமெரிக்கப் படையினர் சுனாமியால் சேதமான கரையோரப் பிரதேசங்களில் புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுவர் என சிறிலங்கா படைத் தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (33)

### சுனாமியால்...

படிவங்களை பூர்த்தி செய்து வழங்குபவர்களுக்கே சமூக சேவைகள் அமைச்சினது நிவாரண உதவிகள் கிடைக்கும் என்ற நிர்ப்பந்தத்துடன் இந்த படிவங்கள் அரசாங்க அதிகாரிகளால் விநியோகிக்கப்பட்டு வருவதால் சிங்கள மற்றும் ஆங்கில மொழியறிவில்லாத மக்கள் அவற்றைப் பூர்த்தி செய்வதற்காக மொழிபெயர்ப்பாளர்களைத் தேடி அலைய வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

முற்று முழுதான தமிழ்ப் பிரதேசமான யாழ்.குடா நாட்டிற்கு விபரச் சேகரிப்பிற்காக அனுப்பப்பட்டுள்ள படிவங்களில் அமைச்சு தமிழ் மொழியைப் புறக்கணித்துள்ளமை விசமத்தனமான செயல் என வடமராட்சி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கடற்றொழிலாளர் சங்க சமாசத்தினரும் விசனம் தெரிவித்துள்ளனர்.இவ்வாறான படிவங்களைத் தமிழில்அமைத்து வழங்கவும் அத்துடன் கோரியுள்ளனர். (33)

### சுனாமி...

கம்பனியுடன் கைச்சாத்திட்டிருந்தார். சுமார் 300 கோடி ரூபா செலவில் 10 அதிவேக அதிரடிப் படகுகளும், சுமார் ஐம்பத்தொட்டரைக் கோடி ரூபா செலவில் துருப்புக்களை ஏற்றி இறக்கக் கூடிய சிறிய ரகக் கப்பல் ஒன்றும் வாங்குவதே இந்த ஒப்பந்தம் ஆகும். ஆனால், ஒப்பந்தம் கைச்சாத்தாகி நான்கு நாட்களில் ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டது.

தற்போதைய ஆழிப்பேரலையால் கடற்படையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. ஆகவே, அதனை மீளக் கட்டியெழுப்ப புதிய கொள்வனவுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற தோரணையில் நிவாரண உதவிகளாக வெளிநாடுகள் கொடுக்கும் நிதியில் ஒரு பகுதயை பெறும் திட்டத்துடன் செயறபடகடற் படைத் தளபதி தொடங்கியுள்ளார்.

### ஆயுதங்கள்...

ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து ஹெய்ட்டிக்கு சுமார் 750 படையினர் அமைதி காப்புக்காக கடந்த மாதம் அனுப்பிவைக்கப்பட்டனர். இவர்கள் எடுத்துச் செல்வதற்காக ஆயுத உபகரணங்கள் இந்தியாவில் இருந்தே இறக்குமதி செய்யப்பட்டன. இதனை கொள்வனவு செய்த அதிகாரிகள் தரம் குறைந்த உபகரணங்களையே கொள்வனவு செய்திருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஹெய்ட்டியில் உள்ள இலங்கையின் அமைதிப் படையினர் உபகரணங்கள் தற்சமயம் செயலிழந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(32)

### சுனாமி புனரமைப்பு...

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களுக்கு வெளியில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் தமது நிவாரணப் பணிக் குழுவினர் மத்தியில் உரையாற்றும் போதே ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அதரசிங்க இவ்வாறு கூறினார்.

மேலும் அரசசார்பற்ற நிறுவனங்கள் நலன்புரி சேவைகளில் மட்டும் கவனம் செலுத்திச் செயற்பட வேண்டுமெனவும், நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் தலையிடாமல் இருப்பது சிறந்ததென அவர் தெரிவித்துள்ளார்.

எமக்கு தொடர்ந்து உதவிகளை வழங்கும் சர்வதேச நண்பர்களின் உதவிகளை பெறவேண்டியது அவசியமாகும். நாட்டிற்கு தீங்கு ஏற்படும் நோக்கில் யாராயினும் செயற்பட்டால் அதனை கட்டுப்படுத்த முடியுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

சுனாமி காரணமாக நாடு பெரும் அழிவிற்கு முகம் கொடுத்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் வெளிநாடுகளிடமிருந்தும், மக்களிடமிருந்தும் கிடைக்கும் உதவிகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். பொருளாதார ரீதியாக நாம் பின்தங்கியவர்கள் என்பதால் இவ் உதவிகள் எமக்கு அவசியமாகின்ற ஆயினும் தேசிய பாதுகாப்பை பொறுத்த வரை நாம் சுயமாக செயற்பட முடியும். வடகிழக்கு மாகாணங் களை அபிவிருத்தி செய்ய அர சாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுட னும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளோடும் இணைந்து அரசாங்கம் செயற்படவேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### சுனாமியால் இறந்தோர்...

வாழ்வியல் அனுகூலங்களை ஓரளவு உள்வாங்கத் தொடங்கினர்.

இந்நிலையில் கடந்த 26.12.2004 அன்று சற்றும் எதிர்பாராத விதமாக பொங்கி எழுந்த நிலவதிர்வுப் பேரலைகள் இலங்கைத்தீவு உட்பட தென்னாசியப் பிராந்தியத்தின் கடலோரப் பகுதிகளைத் தாக்கி பேரழிவை ஏற்படுத்தியது. இலங்கைத் தீவில் எமது தாயகப் பகுதிகளில் வாழும் எமது மக்கள் அதிகமான அழிவுகளையும் இழப்புக்களையும் சந்தித்து பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள். இந்த இயற்கையின் கோரத் தாண்டவத்தால் இடம்பெயர்ந்த எமது மக்கள் தமது உறவுகளையும் வாழ்விடங்களையும் இழந்து, பிரிந்த தமது உறவுகளின் சோகத்துடன் மனது பேதலித்த நிலையில் மீண்டும் நலன்புரிநிலையங்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் இருந்து வருகிறார்கள்.

இப்பேரனர்த்தம் காரணமாக தமிழர் தாயகத்திலும் ஏனைய தெற்காசிய நாடுகளிலும் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் முகமாக எதிர்வரும் 26.01.2005 நாள் தேசிய துக்கதினமாக தமிழீழ விடுதலைப்புலிகளால் பிரகடனப்படுத்தப்படுகிறது. இந்நாளில் தமது அன்புக்குரியவர்களையும் உறவுகளையும் இழந்து துடிக்கும் எமது உறவுகளின் சோகத்தில் பங்குகொள்வோம்.

மூர்க்கமாக எழுந்த கடலலைகளில் சிக்கி எமது உறவுகள் உயிர்நீத்த அந்தக் கணத்தில், தமிழர் தேசத்திலும் புலம் பெயர்ந்து தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் நினைவுச் சுடரேற்றி இழந்துபோன உறவுகளை நினைவில் நிறுத்துவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது..

## சாவு அறிவித்தல்



### கந்தையா – செல்லையா

கருங்காலியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் துட்டாதெரு இல.961 ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா - செல்லையா (முன்னாள் செல்லையா ஸ்டோர்ஸ் சுன்னாகம், வட்டக்கச்சி பூமகள் ஸ்டோர்ஸ் உரிமையாளரும், பதுளை செல்லையா என்று அழைக்கப்படும்) இவர் 20.01.2005 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், முருகானந்தன (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை, B.K), புவனேஸ்வரி, கதிர்காமநாதன் (சிறிநாதன் களஞ்சியம், இல 961. K.K.S றோட், துட்டாதெரு,யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திராதேவி, நடராசா (தீபிகா களஞ்சியம், நெல்லியான் வீதி சுழிபுரம்), சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கோகுலன், கோபிகா, தீபிகா, சுகிஜா, மயூரிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (21.01.2005) வெள்ளிக்கிழமை கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முகவரி:-
தலையாளி வைரவர் கோவிலடி,
(பூநாறிமரத்தடிச் சந்தி),
சபாபதி லேன், கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

(சி.11218)

தகவல்:-
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.